
# இந்தியாவுக்காக...



J. சாம்ஜெபத்துரை

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

28. 06. 90

9

# இந்தியாவுக்காக...!

(FOR INDIA)

A. DEVARAJ PITCHAIMONI, M.Sc.
MUNICIPAL WOMEN CHILDREN,
HOSPITAL QUARTERS,
TIRUNELVELI-627006.

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்

**J. சாம் ஜெபத்துரை**

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு

கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : பெப்ருவரி 1989
இரண்டாம் பதிப்பு : பெப்ருவரி 1990
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 104

அச்சிட்டோர்:-
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

# அர்ப்பணம்

அருமையான ஜெப வீரரும்
ஜெபவீரர் சேனையின் தலைவருமாகிய
**இயேசுவுக்கே இந்நூல் அர்ப்பணம்!**

அவர் ஜெப வீரர் சேனையை
ஆயிரமாயிரமாய் எழும்பப் பண்ணுவாராக!
முழங்கால் வீரர்களை
அக்கினி ஜூவாலையாக்குவாராக!

ஆவியின் வரங்களாலும், வல்லமையாலும்
நிரப்புவாராக!
ஆமென்! அல்லேலூயா!!

# பொருளடக்கம்


| என் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்தியாவுக்காக ஜெபியுங்கள்! | 5 |
| 2. | இந்தியாவைப் பற்றிய விபரங்கள்! | 10 |
| 3. | முன் மாதிரி! | 18 |
| 4. | தமிழ்நாட்டிற்காக ஜெபியுங்கள்! | 27 |
| 5. | ஆந்திராவிற்காக ஜெபியுங்கள்! | 30 |
| 6. | கேரளாவிற்காக ஜெபியுங்கள்! | 32 |
| 7. | உன் வேண்டுதல் கேட்கப்பட்டது! | 34 |
| 8. | கர்நாடகாவிற்காக ஜெபியுங்கள்! | 41 |

# இந்தியாவுக்காக ஜெபியுங்கள்!

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! இந்திய தேசம் உங்களுக்கு முன்பாக இருக்கிறது. கோடிக்கணக்கான மக்கள் உங்களுக்குமுன்பாக நிற்கிறார்கள். இருளிலும், அந்தகாரத்திலும் சிக்குண்டு எங்கே வெளிச்சமிருக்கிறது? எங்கே நித்திய பாதை இருக்கிறது? யார் எங்களுக்கு ஆறுதல் கூறுவார்? என்று ஜனங்கள் கலங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இருளில் புழுக்களைப் போல நெளிந்து சமாதானத்திற்காகவும், சந்தோஷத்திற்காகவும் ஏங்குகிறார்கள். ஜெபிப்பீர்களா?

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! அது உங்களுடைய தேசம் அல்லவா? கர்த்தர் உங்களை இந்தியாவில் பிறக்கச் செய்ததற்கு ஒரு நோக்கம் உண்டல்லவா? எஸ்தருக்கு எவ்விதமாக தன்னுடைய தேசத்தின் மேலும், இஸ்ரவேல் ஜனங்கள் மீதும் ஒரு பாரம் இருந்ததோ, அவ்விதமாக இந்தியாவின் மேல் உங்களுக்கு ஒரு பாரத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். பாரம் இருந்தால்தானே உங்களால் ஜெபிக்க முடியும்?

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! கர்ப்ப வேதனையோடு ஜெபியுங்கள். பிரசவ வலியோடுகூட மன்றாடுங்கள். அப்போஸ்தலனாகிய பவுல், ''கிறிஸ்து உங்களில் உருவாகும்படி உங்களுக்காக கர்ப்ப வேதனைப்படுகிறேன்'' என்று சொன்னாரே. இந்தியாவிலுள்ள ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் கிறிஸ்து பிறக்கும்படி கண்ணீரோடு மன்றாடுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! இயேசு கிறிஸ்துவின் அருமையான அப்போஸ்தலனாகிய தோமா இந்தியாவிற்கு வந்தாரே. கல்லுகளிலும், முள்ளுகளிலும் நடந்து தமிழ் நாட்டை நோக்கி கடந்து வந்தாரே, திரும்பி இஸ்ர

வேலுக்கு செல்ல வேண்டும் என்ற விருப்பமில்லாமல் தன்னைத் தியாக பலியாக்கி கடந்து வந்தாரே. அவர் இந்தியாவிற்கு வந்த நோக்கம் நிறைவேற ஊக்கமாய் ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! இயேசு கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து இரண்டாயிரம் ஆண்டுகளாகி விட்டதே, இன்னும் நம்முடைய தேசம் சந்திக்கப்பட வில்லையே! எவ்வளவு காலம் நம்முடைய மக்கள் விக்கிரக ஆராதனையிலும், அடிமைத்தனத்திலும் இருப்பார்கள்? அறியாமையிலும், வறுமையிலும் வாடுவார்கள்? அவர்கள் நம்முடைய சகோதரர்கள் அல்லவா?

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! சாது சுந்தர்சிங் போன்ற பக்தர்கள் எழும்பின தேசம் இதுவல்லவா? அவர் இந்தியாவிற்காக எவ்வளவாய் பிதாவினிடத்தில் மன்றாடியிருந்திருப்பார்? காவி உடுத்திக் கொண்டு தாடி வளர்த்துக் கொண்டு கால்களில் செருப்புக்கூட அணியாமல் ஆட்டுக்குட்டியானவர் எங்கெங்கே நடக்கச் சொன்னாரோ, அங்கேயெல்லாம் நடந்துச் சென்றாரே! அவ்விதமான பக்தர்கள் இந்த நாட்களில் நம்முடைய தேசத்தில் எழும்ப ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! எழுபத்தைந்து லட்சம் கிராமங்கள் இங்கே உண்டே! ஒவ்வொரு கிராமங்களையும் அந்தகார சக்திகள் கட்டி வைத்திருக்கிறதே! அந்த கிராமங்கள் விடுதலையாக்கப்பட ஜெபியுங்கள்! அந்தகாரத்தின் ஆதிக்கங்கள் தேசத்தை விட்டு அகன்றுப் போக ஜெபியுங்கள்!

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! வேதத்தில் தெபொராளைக் குறித்து வாசித்துப் பாருங்கள். இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும், இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய் போயின என்று சொல்லி அவள் புலம்பினாளே! அதுபோலவே, இந்தியாவிலுள்ள கிராமங்கள் பாழாய்

போய்க் கொண்டிருக்கிற இந்த சூழ்நிலையில் இந்தியாவிலே ஒரு ஆவிக்குரிய தாயாக எழும்பி ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! பதினாறும் நூற்றாண்டில் இருந்து இந்தியாவிற்கு எத்தனையோ மிஷனெரிகள் வந்து தங்களுடைய இரத்தத்தைச் சிந்தி, மரித்திருக்கிறார்களே. கார்டுவெல், போப், ராக்லெண்ட் போன்ற பக்தர்கள் எல்லாம் நம்முடைய தேசத்திலே இரத்த விதைகளை ஊன்றினார்களே. எத்தனை ஆயிரம் மிஷனெரிகள் தங்களுடைய ஜீவன்களை இந்தியாவிற்காக முதலீடு செய்தார்கள். அத்தனை கோதுமை மணிகள் நம்முடைய தேசத்தில் மரித்திருக்க, எழுப்புதல் ஏற்படாமல் இருப்பதெப்படி?

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதமாக ஜெபித்தார், "தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப்பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்" (ஏசா 64:2). நீங்களும் அவ்விதமாய் ஜெபிப்பீர்களா?

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! வேல்ஸ் தேசத்தில் பற்றியெரிந்த அக்கினி, இந்தோனேஷியாவை ஆட்கொண்ட வல்லமையின் அக்கினி, கொரியாவில் முகாமிட்டிருக்கும் உன்னதத்தின் பெலனுகிய அக்கினி, நம்முடைய தேசத்தில் எழுப்புதல் நதியாக கரை புரண்டு வர ஜெபியுங்கள்!

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! திறப்பின் வாசல்கள் இன்றைக்கும் கிருபையாய் திறந்து வைக்கப்பட்டிருக்கிறதல்லவா? கிருபையின் வாசல்கள் மூடாமல் இருக்கிறதல்லவா? இந்த நேரத்தில் தாம் தீவிரமாக எழும்பவேக்கமாய் ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! கிறிஸ்துவை நேசிக்கிற ஆயிரம், ஆயிரமான மக்கள் எழும்பட்டும்; ஜெப வீரர்கள் எழும்பட்டும்; வாலிபர் எழும்பட்டும்; கர்த்தருக்காக

வைராக்கியம் பாராட்டுகிற மக்கள் கோடானகோடியாய் எழும்பட்டும்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! எவ்வளவு காலம் கிறிஸ்தவர்களாகிய நாம் சிறுபான்மையினராக இருப்பது? மூன்று சதவீதத்திற்கும், நான்கு சதவீதத்திற்கும் இடையிலே தள்ளாடிக் கொண்டிருப்பது? எவ்வளவு காலம் அந்தகார சக்திகள் பெலன் கொண்டிருக்கும்? கர்த்தர் பலத்த பராக்கிரம சாலியாய் எழும்பும்படி, அந்தகார சக்திகளை பாதாளத்தில் தள்ளி இரும்பு சங்கிலியால் அவைகளை கட்டிப் போடும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! ஒரு ஆலயம் கூட இல்லாத மாவட்டங்கள் ஏராளம் உண்டே! ஒரு சுவிசேஷகர்கள் கூட இல்லாத பல பல கிராமங்கள் உண்டே! கர்த்தர் ஆங்காங்கே சபைகளையும், ஊழியக்காரர்களையும், விசுவாசிகளையும் ஏற்படுத்த ஊக்கமாய் ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! கிறிஸ்துவை எடுத்துச் சொல்ல போதுமான மத சுதந்திரம் தேசத்தில் கிடைக்க ஜெபியுங்கள். தென்னிந்தியாவிலிருந்து சேனை சேனையாய் தேவ ஊழியர்களும் மிஷனெரிகளும் வட இந்தியாவிற்குச் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க, அங்குள்ளவர்களெல்லாம் எழுப்புதலடைந்து உலகமெங்கும் செல்ல ஊக்கமாய் ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! கிறிஸ்துவைக் குறித்து ஒரு முறை கூட கேள்விப் பட்டு அறியாத தாகமுள்ள மக்கள் ஆவிக்குரிய மன்னா கேட்கிறார்களே; ஜீவத் தண்ணீரைப் பருக தாகத்தோடு இருக்கிறார்களே! அவர்கள் கிறிஸ்துவைக் கண்டுகொள்ள ஊக்கமாய் ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! ஆவிக்குரிய புத்தகங்கள் கோடிக் கோடியாய் எழுதப்பட, ரேடியோவின் மூலமாக, திரைபடங்களின் மூலமாக, பாடல்களின் மூலமாக,

வேதாகம கல்லூரிகளின் மூலமாக, பத்திரிகைகளின் மூலமாக செய்யப்படுகிற ஊழியங்களை கர்த்தர் ஆசீர் வதிக்கும்படி ஜெபியுங்கள்!

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! ஏராளமான வேதா கமச் சங்கங்கள் இந்தியாவில் உண்டே! அவர்கள் உண்மை யும் உத்தமமுமாய் செயல்பட ஜெபியுங்கள். இன்னும் வேதாகமம் மொழி பெயர்க்கப்படாத 800 மொழிகளில் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட ஊக்கமாய் ஜெபி யுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! எவ்வளவோ மிஷ னெரி இயக்கங்கள் நம்முடைய தேசத்தில் இயங்குகிறது. கர்த்தர் உண்மையும் உத்தமுமான மிஷனெரிகளை எழுப்பும் படி, அவர்கள் ஆவியோடும், உண்மையோடும் எழும்பி தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி ஊக்கமாய் ஜெபி யுங்கள். யோசுவாவின் ஆவியோடும், உண்மையோடும் முன்னேறிச் செல்ல கர்த்தர் கிருபையளிக்கும்படி ஊக்க மாய் ஜெபியுங்கள்.

இந்தியாவிற்காக ஜெபியுங்கள்! கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் பெயர் கிறிஸ்தவர்களல்லவா? கிறிஸ்த வர்களுக்குள்ளே குடியும், வெறியும்,உலகத்தின் உல்லாசங் களும் காணப்படுகிறதே! பெயர் கிறிஸ்தவர்கள் மனம் திரும்ப ஊக்கமாய் ஜெபியுங்கள். பெயர் கிறிஸ்தவ ஆலயங்கள் எழுப்புதல் அடைய ஊக்கமாய் ஜெபியுங்கள். ஒவ்வொரு ஆலயங்களும் ஆத்தும அறுவடை செய்கிற வல்லமையுள்ள ஆலயங்களாக விளங்க ஜெயியுங்கள்.

# இந்தியாவைப் பற்றிய விபரங்கள்:

| | | | |
|---|---|---|---|
| தலை நகரம் | : | புதுடில்லி | |
| ஜனத்தொகை | : | 83,45,00,000 | |
| முக்கியமான மொழிகள் | : | 14 தேசிய மொழிகள் உண்டு. அவையல்லாமல் 1,600 மொழிகள் பேசும் மக்கள் இந்தியாவில் உண்டு. | |
| மதங்கள் | : | இந்துக்கள் : | 76.30% |
| | | முஸ்லீம் : | 13.00% |
| | | சீக்கியர்கள் : | 2.00% |
| | | மூதாதையரின் ஆவி வணக்க முன்னோர் : | 1.50% |
| | | புத்தர்கள் : | 0.80% |
| | | ஜெயின் மதத்தினர் : | 0.50% |
| | | கிறிஸ்தவர்கள் : | 3.60% |

கிறிஸ்தவர்களுக்குள் ரோமன் கத்தோலிக்கர்கள் 1.55%

சிரியன் ஆர்தோடாக்ஸ் : 0.25%

புராட்டஸ்டண்ட்: 1.86%

வெளி தேசத்திலிருந்து இந்தியாவில் தங்கி மிஷனெரி ஊழியம் செய்பவர்கள் ஏறக்குறைய 800 பேர். இந்தியாவில் எழும்பியிருக்கிற இந்திய மிஷனெரிகள் 4,200 பேர்.

வெளி தேசத்திலிருந்து இந்தியாவில் ஊழியம் செய்கிற மிஷனெரிகள் ஒவ்வொருவரையும் தங்கள் தாயகத்திற்கு திரும்ப வேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறபடியால் வெளிநாட்டிலுள்ள மிஷனெரிகள்

மிகவும் வேகமாக அவர்கள் தேசத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தியாவை நம் இந்தியர்களால் தான் சந்திக்க முடியும்! ஆகவே, இந்தியாவில் ஆயிரமாயிரமான இளம் மிஷனெரிகள் எழும்பும்படி ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

எசேக்கியேல் 3:17 முதல் 21 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். கர்த்தர் உங்களை ஜெப காவலாளராக வைத்திருக்கிறார் என்பதை மறந்துபோகவேண்டாம்.

''மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக.

சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால் அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப் பழியையோ உன் கையிலே கேட்பேன்.

நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய். அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதி கேடு செய்யும் போதும், நான் அவன் முன் இடறலை வைக்கும் போதும் அவன் சாவான்; நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; அவனுடைய இரத்தப் பழியையோ உன் கையிலே கேட்பேன்.

நீதிமான் பாவஞ் செய்யாதபடிக்கு நீ நீதிமானை எச்சரித்தப் பின்பு அவன் பாவஞ்செய்யாவிட்டால், அவன்

பிழைக்கவே பிழைப்பான்; அவன் எச்சரிக்கப்பட்டான்; நீயும் உன் ஆத்துமாவைத் தப்புவித்தாய் என்றார்'' (எசே 3:17-21).

இந்தியாவிலுள்ள சபைகளைக் குறித்து சில குறிப்புகளை உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**இந்திய சபைகளின் விசுவாசிகள்:-**

| | | |
|---|---|---|
| மொத்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை | : | 3,05,00,000 |
| இதில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் | : | 46. 75% (கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தென்னிந்தியாவிலும், கோவாவிலும் அதிகமாக இருக்கிறார்கள்). |
| சீரியன் ஆர்த்தோடாக்ஸ் | : | 6.25% (அவர்கள் பெரும்பாலும் கேரளாவை சேர்ந்தவர்கள்) |
| புராட்டஸ்டண்ட் | : | 47.00% |

இந்தியாவில் ஏறக்குறைய 320 வகையான சபை பிரிவுகள் இருக்கிறது. இதை தவிரவும் ஆயிரக்கணக்கான சிறு சிறு சபை இயக்கங்களும் உண்டு. இந்த சபையாரின் ஏறக்குறைய எண்ணிக்கைகளை உங்களுக்குக் கொடுக்கிறேன். இதில்:

| | | |
|---|---|---|
| தென்னிந்திய திருச்சபை | : | 6,00,000 |
| லுத்தரன் சபை | : | 4,64,000 |
| பாப்டிஸ்ட் சபை | : | 4,00,444 |
| மெதடிஸ்ட் சபை | : | 4,00,000 |
| மார்த்தோமா | : | 2,70,000 |
| பிரஸ்பிட்டேரியன் சபை | : | 2,01,000 |
| பெந்தேகோஸ்தே சபை | : | 3,00,000 |

ஒவ்வொரு சபையிலும் சுவிசேஷ வாஞ்சையுள்ள விசுவாசிகள் எழும்பும்படி ஜெபியுங்கள். ஒவ்வொரு சபையும் ஆத்தும பாரம் உள்ள சபையாகத் திகழவும், சபையின் வருமானத்தில் ஒரு பகுதியை சுவிசேஷ ஊழியங்களுக்கென்று செலவிடவும் ஜெபியுங்கள்.

சபைகள், அனுபவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் வேத வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க ஜெபியுங்கள். வேதத்தின் அடிப்படையிலே அவர்கள் பிரசங்கிக்கவும், ஜீவ விதைகளையே ஊன்றவும் வேண்டிக் கொள்ளுங்கள்.

இன்றைக்கு அநேக சபைகள் உபதேசங்கள் என்றப் பிரிவினால் வைராக்கியங்களுக்கும், கசப்புகளுக்கும் இடங்கொடுத்து அன்பில் தாழ்ச்சியடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு சபையிலும் பரிசுத்தவான்கள் உண்டு; ஒவ்வொரு சபையிலும் கர்த்தரை உண்மையாய் சேவிக்கிறவர்களும் உண்டு. தேவனுடைய ஜனங்களின் ஐக்கியத்திற்காக ஜெபிப்போம். கிறிஸ்துவின் இரத்தத்தால் ஒன்றுபட ஜெபிப்போம். இரட்சிப்பு ஒவ்வொருவரையும் இணைப்பதாக.

சபைகளில் பாரம்பரியமாகவும், சடங்காச்சாரமாகவும் தொழுதுக் கொள்வது மாறி, கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும், தொழுது கொள்ள ஜெபியுங்கள். இது ஆவியின் பின்மாரியின் காலமானபடியினாலே ஒவ்வொரு விசுவாசிகளும் பரிசுத்தாவியாலும், வல்லமையாலும் நிரப்பப்பட ஜெபியுங்கள்.

சபைகளிலே அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள் எழும்புவார்களாக. சபைகளிலே ஆவியின் வரம் வல்லமையாய் கிரியை செய்ய ஜெபித்துக்கொள்ளுங்கள். புற ஜாதியினரை அன்பினாலும், வசனத்தினாலும் தேவ வசனத்திற்கு கீழ்ப்படியப் பண்ணும் பொருட்டு கர்த்தர் வல்லமையான காரியங்களைச் செய்யும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள்.

அநேக காலங்கள் அநேக வேதாகம சங்கங்களிலே ஊழல்கள் ஏற்பட்டு அதினால் கிறிஸ்தவ மார்க்கமே எள்ளி நகையாடப்பட வேண்டிய சூழ்நிலை வந்தது. தினசரி பேப்பர்களிலே அதைப் பற்றிய செய்திகள் ஏராளமாய் வெளிவந்தது. அப்படிப்பட்டவர்கள் வேதாகம சங்கத்தில் இருந்து விலகும்படி, கர்த்தருடைய கரம் வல்லமையாய் குறுக்கிடும்படி ஊக்கமாய் ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் தம்முடைய திருச்சபையிலும் சரி, வேதாகம சங்கத்திலும் சரி, அல்லது மற்ற இயக்கங்களிலும் சரி உண்மையும், உத்தமமும் உள்ளவர்களையே கொண்டு வரும்படி ஜெபியுங்கள்.

இந்தியாவில் பல வேதாகமக் கல்லூரிகள் உண்டு. அவைகளில் பெரும்பான்மையானவைகள் வெளிநாட்டு பணத்தினால் இயங்குபவை. அந்த வெளிநாட்டு பணத்தை வாங்குகிறவர்கள் உண்மையுள்ளவர்களாக இல்லாததினாலே வேதாகம கல்லூரிகளிலிருந்து வெளி வருகிறவர்கள் சரியான போதனையின்றி, சரியான ஆவிக்குரிய உணவின்றி தள்ளாடினவர்களாக வெளி வருகிறார்கள். முறுமுறுப்போடும், குறை சொல்லுதலோடும் வெளி வருகிறார்கள். உண்மையாகவே மாணவர்கள் மேல் பாரமுள்ள பிரின்ஸ்பால்கள், ஆசிரியர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

அநேக மிஷனெரி இயக்கங்கள் எழும்பும்படியாகவும் அதன் மூலமாக வாலிப மிஷனெரிகள் நூற்றுக்கணக்காக, ஆயிரக்கணக்காக வெளி வரவும் ஜெபியுங்கள்.

இந்துக்களுக்காக ஜெபியுங்கள். இந்தியாவின் ஜனத்தொகையில்.

| | |
|---|---|
| இந்துக்களின் ஜனத்தொகை | : 66, 00, 00, 000 |
| இதில் உயர்தர இந்துக்கள் | : 82% |
| பின் தங்கிய ஹரிஜனங்கள் | : 18% |
| இந்துக்களில் உள்ள ஜாதி பிரிவுகள் | : 3, 000 (ஏறக்குறைய) |

இந்து ஜாதியிலேயே 73 வகையான ஜாதி பிரிவு களுக்கு மட்டுமே சுவிசேஷம் எட்டியிருக்கிறது. மீதமுள்ள 2,927 வகையான ஜாதிகளுக்கு சுவிசேஷம் இன்னும் எட்டவில்லை.

இந்துக்களில் ஏறக்குறைய ஒன்றரை சதவீதம் மக்கள் பிராமணர்கள். இவர்கள் தான் புராணங்களையும், இதிகா சங்களையும் உண்டாக்கினவர்கள். இவர்கள் ஒன்றரை சதவீதமாக இருந்தாலும் மிகவும் அதிகமாக படித்தவர் களாகவும், அரசாங்க அதிகாரிகளாகவும், உயர்ந்த உத்தி யோகம் வகிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மிக அதிகமாக முட்டுக்கட்டைப் போடுகிறார்கள். கிறிஸ்தவர்களை கீழ் ஜாதியாக கருது கிறார்கள். இந்தியாவில் பிராமணர்கள் இரட்சிக்கப்படும் படி ஊக்கமாய் ஜெபியுங்கள். ''பிராமணர்கள் இயேசு வுக்காகவே'' என்ற இயக்கம் வளர வேண்டிக் கொள்ளுங் ளுங்கள்.

இந்தியாவில் சமீபக் காலங்களில் தோன்றியிருக்கிற இந்து முன்னணி, ஆரிய சமாஜம், ஆர்.எஸ் எஸ். போன்ற இயக்கங்களுக்காக ஜெபியுங்கள். அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக முழு பெலத்தோடு இயங்கி வருகிறார்கள். தேசத்தில் கசப்பு விதைகளை விதைக் கிறார்கள். கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கும் இடை யிலே பகையுணர்ச்சிகளை வளர்க்கிறார்கள். சமீப காலத் தில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மண்டைக்காட் டில் நடந்த கலவரத்திற்கு இவர்கள் தான் மூல காரண மாவார்கள்.

இந்துக்களிலே மார்வாடிகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். இவர்கள் தான் கிறிஸ்தவர்களுக்கு விரோத மாக இறங்குகிற இயக்கங்களுக்கு பெருமளவில் பண உதவி செய்கிறவர்கள். வட்டிக்கு கொடுத்து சம்பாதிக்க வும் அடகு பிடிப்பது போன்ற தொழில் துறைகளில் இறங்கி ஏழை மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டி

ருக்கிறார்கள். அவர்களுக்கிருக்கிற பண பலத்தினால் எல்லாவற்றையும் சாதிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

இந்தியாவிலுள்ள ஆதி வாசிகள், மலைவாசிகள் சந்திக்கப்பட முடியாதபடி அரசாங்கம் பல தடை சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. மத மாற்று தடை சட்டங்கள் அநேக மாவட்டங்களில் இருக்கிறது. அவைகள் முறிக்கப்பட ஜெபியுங்கள். ஆதிவாசிகள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவினண்டை வந்தால் மற்ற இந்துக்கள் இவர்களை ஒடுக்குகிறார்கள். கிறிஸ்துவுக்குள் புதிதாய் வருகிறவர்களுக்கு உபத்திரவங்களும், பாடுகளும் காத்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலை மாற ஜெபியுங்கள்.

இந்துக்களை சந்திப்பதற்காக பல இயக்கங்கள் ரேடியோவின் மூலமாகவும், துண்டு பிரதிகளின் மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவும் செயல்படுகின்றன. கர்த்தர் அந்த வேத வாக்கியங்களோடு இணைந்து தேசத்தில் ஒரு பெரிய எழுப்புதலை ஏற்படுத்த ஊக்கமாய் வேண்டிக் கொள்ளுங்கள்.

முஸ்லீம்களுக்காக ஜெபியுங்கள். இந்தியாவிலுள்ள மொத்த முஸ்லீம்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| முஸ்லீம்களின் ஜனத்தொகை | : | 13,00,00,000 |
| உத்திரபிரதேசம் | : | 1,90,00,000(15.00%) |
| மேற்கு வங்காளம் | : | 1,27,47,000(21.00%) |
| பீகார் | : | 1,10,00,000(13.00%) |
| அஸ்ஸாம் | : | 66,90,000(30.00%) |
| மஹாராஷ்டிரா | : | 58,96,000(08.40%) |
| கேரளா | : | 55,38,000(19 50%) |
| ஆந்திர பிரதேசம் | : | 47,84,000(08.00%) |
| ஜம்மு & காஷ்மீர் | : | 44,50,000(66.00%) |

முஸ்லீம்களுக்காக ஊக்கமாய் ஜெபியுங்கள். இந்துக்களிலிருந்து முஸ்லீம்களாக மாறுவது சுலபம். ஆனால்,

முஸ்லீம்களாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறுவது கடினமாக இருக்கிறது. முஸ்லீம்கள் மிகவும் வைராக்கியமுள்ளவர்களாக இருக்கிறார்கள். முஸ்லீம்களாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறுகிறவர்களுக்கு விரோதமாக மத குருக்களும், சமுதாயமும் உடனே எழும்பி விடுகிறது.

முஸ்லீம்களாக இருந்து இரட்சிக்கப்பட்டு, முஸ்லீம் சமுதாயத்தில் பணி புரிகிற மிஷனெரிகள் மிகவும் குறைவு. நூற்றுக்கும் குறைவானவர்களே முழு நேர சுவிசேஷகர்களாக பணியாற்றுகிறார்கள். ஆகவே, இந்தியாவிலுள்ள பதிமூன்று கோடி முஸ்லீம்களையும் சந்திக்க கர்த்தர் அநேகம் மக்களை எழுப்பும்படி ஜெபியுங்கள்.

இதுவரை முஸ்லீம் மார்க்கத்திலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும், இரண்டாயிரத்திற்கும் இடையிலே நின்றுக் கொண்டிருக்கிறது. அப்படி முஸ்லீம் மார்க்கத்திலிருந்து வெளிவந்த சகோதர, சகோதரிகள் கர்த்தருக்காக பக்தி வைராக்கியமாக உழைக்கும்படி ஜெபியுங்கள்.

முஸ்லீம்களுக்கென்று அதிகமான புத்தகம் வெளியிடவும், முஸ்லீம்கள் கேட்கும் கேள்விகளுக்கு வல்லமையான பதில்கள் தரவும், கிறிஸ்தவ தேவ ஊழியர்களை எழுப்பும்படியும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வேலூரையும் பெங்களூரையும் மையமாகக் கொண்டு சகோ. கிரீன் ரோஸ் அவர்கள் முஸ்லீம்கள் மத்தியில் செய்யும் ஊழியங்கள் விரிவடையவும், வல்லமையாக விளங்கவும் வேண்டிக் கொள்ளுங்கள்.

முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்குமிடையே அடிக்கடி இந்தியாவில் இனக்கலவரங்கள் நடந்துக் கொண்டிருக்கிறது. சில நேரங்களில் தமிழ் நாட்டிலும் அது பரவுகிறது. இந்தச் சூழ்நிலை மாறும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள்.

# முன் மாதிரி!

ஜெப ஜீவியத்திற்கு யார் நமக்கு முன்மாதிரி? யார் நம்மோடு இணைந்து ஜெபிக்கக் கூடியவர்கள்? ஜெபத்திலே நாம் யாரை பின்பற்றுவது? என்று பல கேள்விகளை நீங்கள் கேட்கக் கூடும்.

நமக்கு நல்ல முன்மாதிரி இயேசுகிறிஸ்து. கெத்செமனே தோட்டத்திற்கு வாருங்கள். நம்முடைய அருமை ஆண்டவர் எவ்வாறு தம்முடைய இருதயத்தை ஊற்றி மன்றாடுகிறார் என்பதை கவனித்துப் பாருங்கள். வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு, பலத்த சத்தத்தோடு, பிதாவை நோக்கி கதறுகிறதை கேளுங்கள்.

வேதம் சொல்லுகிறது: ''அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்; அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது'' (லூக் 22:44).

இன்னும் சில மணி நேரங்களுக்குள் அவர் சிலுவையிலே தொங்கவேண்டும். முள்முடி சூட்டப்பட வேண்டும், கை கால்களெல்லாம் ஆணிகளால் கடாவப்பட வேண்டும். எல்லாராலும் ஏளனமாய், பரியாசமாய் நிந்திக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் தன்னுடைய நேரத்தை ஜெபத்திலே செலவிட விரும்பினார்.

அவரோடு கூட சேர்ந்து ஜெபிக்க ஒருவரும் இல்லை. அவருடைய இருதயத்தின் பாரங்களை பகிர்ந்து கொள்ள ஒருவராலும் கூடாதிருந்தது. அவரோடுகூட இருந்த சீஷர்களோ கன நித்திரையின் ஆவியினால் தூங்கித் தூங்கி விழுந்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் ஜெபம் விடுதலைக்காக ஜெபித்த ஜெபம் அல்ல. விடுதலைக்காக ஜெபிப்பது எளிதுதான்.

ஆனால் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபிப்பதே மிகவும் கடினமான ஒரு காரியம். இயேசு தன்னுடைய சுய விருப்பம் நிறைவேற ஜெபிக்காமல், பிதாவின் சித்தமே தன் வாழ்க்கையில் முழுவதும் நிறைவேற வேண்டுமென்று ஜெபித்தார். தேவபிள்ளையே, கர்த்தர் நம்மை பலவிதமான பாடுகளின் வழியாக நடத்திக்கொண்டு செல்லும்போது உன்னுடைய ஜெபங்கள் கர்த்தருடைய ஜெபங்களோடு இணைந்து பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிற ஜெபமாய் இருக்கட்டும்! இயேசு என்ன சொல்லி ஜெபித்தார் தெரியுமா? வேதம் சொல்லுகிறது: ''என் பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படிச் செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்'' (மத் 26:39).

ஒவ்வொரு வியாதியஸ்தருக்காக நாம் ஜெபிக்கும் போது அல்லது பிரச்சனைகளாலும், சோதனைகளாலும் வாடுகிற மக்களுக்காக நாம் ஜெபிக்கும்போது பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபிப்பதே நமக்கு நிரந்தரமான ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும்; நம்முடைய சித்தத்தைப் பார்க்கிலும் கர்த்தருடைய சித்தம் ஆயிரம் மடங்கு மேன்மையானது. ஆயிரம் மடங்கு உத்தமமானது! வல்லமையானது! பிதாவே உமக்குச் சித்தமானால் என்கிற வார்த்தைகளை நாம் ஒவ்வொரு ஜெபத்திலும் பயன்படுத்த தவறவே கூடாது.

நாம் எல்லாரும் இரட்சிக்கப்படுவது தேவனுடைய சித்தம்தான். எல்லாரும் கல்வாரியண்டை வருவது அவருக்குச் சித்தம்தான். எல்லாரும் கிறிஸ்துவை தேவன் என்று அறிக்கை பண்ணி அவரை இரட்சகராய் ஏற்றுக்கொள்வது அவருக்கு சித்தம்தான். அதே நேரத்தில் நம்முடைய வாழ்க்கையின் மற்ற பகுதிகளில் கர்த்தருடைய சித்தத்திற்கு நம்மை பரிபூரணமாய் ஒப்புவிக்க வேண்டியதும் அவசியமாய் இருக்கிறது. சில வேளைகளில் விடுதலை பெறுமல்

வாதிக்கப்பட வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படுகிறது. சோதனைகளின் வழியாகவும், பாடுகளின் வழியாகவும் கடந்து செல்லும்போது தேவனுடைய சித்தம் இல்லாமல் விடுவிக்கப்படுவதைப் பார்க்கிலும், தேவனுடைய சித்தத்தின் மையத்திலே தேவனோடு தரித்திருப்பதே நமக்கு பிரயோஜனமானது. சில வேளைகளில் நாம் ஜெபிக்கும்போது ஆவியானவர் நம்முடைய ஜெபத்தோடுகூட இணைந்து தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்கும்படி நம்முடைய உள்ளங்களை ஏவுகிறதை பார்க்கலாம். தேவபிள்ளையே, தேவ சித்தமே உன்னில் பரிபூரணமாய் நிறைவேறட்டும்.

நம்முடைய ஜெபங்களுக்கெல்லாம் இயேசு கிறிஸ்து முன்மாதிரியாய் இருக்கிறதைப் போலவே நம்மோடுகூட இணைந்து ஜெபிப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மோடுகூட எப்போதும் இருக்கிறார். நாம் ஜெபிக்கும்போது ஒருபோதும் தனிமையாய் ஜெபிப்பதில்லை. ஆவியானவரோடு இணைந்து ஜெபிக்கிறவர்களாய் காணப்பட வேண்டும். நாம் எப்படி ஜெபிப்பது? என்பதைக் குறித்து ஆவியானவர் நமக்கு போதிக்கிறார்; வழி நடத்துகிறார்.

வேதம் சொல்கிறது: ''ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்'' (ரோ 8:27).

வேதம் சொல்கிறது: ''ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்''
(ரோ 8:26).

தேவபிள்ளையே, ஜெபிக்க ஆரம்பிக்கும் போதே ஆவியானவருடைய ஆளுகைக்கும், தேவனுடைய சித்தத்திற்கும் உன்னை பரிபூரணமாக ஒப்புக்கொடு. அப்போது

அதனால் வருகிற ஆசீர்வாதங்கள் நித்தியமானதென்றும், நேர்மையானதென்றும் நீ அறிந்து கொள்ளுவாய்.

தேவனுக்கு சித்தமில்லாமல் இருந்தும்கூட நீ உன்னுடைய சுயமாய் விடுபட ஜெபித்தால் கர்த்தர் உனக்கு ஒரு வேளை அதற்கு பதில் கொடுக்கக்கூடும். ஆனால் அது உனக்கு ஆசீர்வாதமாய் இருக்காது.

எசேக்கியா ராஜா வியாதியாய் மரணத் தருவாயில் இருந்த போது கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலம் அவனுடைய வீட்டுக் காரியத்தை ஒழுங்கு செய்யும்படி ஆலோசனை கூறி அனுப்பினார். அதுவே தேவனுடைய சித்தமாய் இருந்தது. ஆனால் அவனோ தன்னுடைய வாழ்க்கையை நீடித்து தரப்பட வேண்டும் என்று போராடி கண்ணீரோடு ஜெபித்தான். அவனுடைய ஆயுளில் பதினைந்து ஆண்டுகள் கூட இருந்தாலும் அது அவனுக்கு ஆசீர்வாதமாய் இருக்கவில்லை. அவனோ பின்மாற்றக்காரனாய் மரித்தான். அவனுக்கு நீடித்துக் கொடுக்கப்பட்ட பதினைந்து ஆண்டுகளிலே அவனுக்கு பிறந்த மகன், பிற்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களை மிகுதியாக பாவத்துக்குட்படுத்துகிறவனாக விளங்கினான். அவனுடைய காலத்தில் விக்கிரக ஆராதனை மிகவும் பெரிதாய் இருந்தது.

இயேசுவை நோக்கி ஒரு குஷ்டரோகி ஒரு முறை அருமையாய் ஜெபித்தான். அவன் என்ன சொன்னான் தெரியுமா? ''உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்'' (மத் 8:2). எத்தனை அருமையான ஜெபம் இது! கர்த்தர் அவனை சுத்தமாக்க சித்தம் கொண்டார். அப்படியே குணமாக்கினார். அவனுடைய ஜெபத்தின் உட்கருத்து, ஆண்டவரே, உம்முடைய சித்தமில்லாமல் நான் சுகமாவதைக் காட்டிலும் உம்முடைய சித்தத்தின் மையத்திலே குஷ்டரோகியாய் இருக்க வேண்டிய நிலைமை தொடர்ந்து இருந்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்ள மகிழ்ச்சியோடு இருக்கிறேன் என்பதாய் இருந்தது.

தேவபயின்ளேயே, உன்னுடைய ஜெபவேளைகளிலெல்லாம் இயேசுவை நோக்கிப் பார். உன்னுடைய அருகிலே கெத்செமனே தோட்டம் இருக்கிறதைப் போல உணர்ந்து, உனக்கு சமீபத்திலே இயேசு நின்று கொண்டிருக்கிறார் என்கிற உணர்வோடு, அவரோடு சேர்ந்து மன்றாடி ஜெபிப்பாயா?

வேதத்தில் திரும்பத் திரும்ப இயேசு கிறிஸ்துவினுடைய ஜெப ஜீவியத்தை ஆராய்ந்து பார். அவர் தம்முடைய ஊழியத்தின் பெரும்பகுதியை ஜெபத்திலே செலவிட்டார். வல்லமையான ஜெபம், ஊக்கமான ஜெபம், போராடி ஜெபிக்கும் ஜெபம் இதுவே அவருடைய வழக்கமாக இருந்தது.

அவருடைய ஊழியத்திற்கென்று பூமியிலே பிதா நியமித்த வருடங்கள் மூன்றரை ஆண்டு காலம் தான். ஊழியத்திற்கான நேரம் குறைவாகவே இருந்தபோதிலும், ஜெபத்தை அசட்டை செய்து, ஊழியம் செய்ய விரும்பவில்லை. அவர் ஜெபத்திற்கு முக்கியத்துவம் தந்தார். அதோடு அவருக்கு உபவாசத்திற்கும் நேரம் இருந்தது. அதிகாலையில் ஜெபத்திற்கு அவருக்கு நேரம் இருந்தது. இரவு வேளை ஜெபிப்பதற்கும் அவருக்கு நேரம் இருந்தது. தன்னுடைய ஊழியத்தில் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சனையின் நேரத்திலும் அவர் ஜெபித்தார். ஒவ்வொரு அற்புதங்களுக்கு முன்பாகவும் அவர் ஜெபித்தார். ஒவ்வொரு நாளும் ஆரம்பிக்கும் போதும், முடிவடையும் போதும் பிதாவோடுகூட உறவாடுவதற்கு அவர் நேரத்தை ஒதுக்கி வைத்திருந்தார். ஆம்! அவருடைய ஜெபஜீவியம் ஒழுங்கானது! பழக்கமானது! இனிமையானது!

உன்னுடைய ஜெப ஜீவியத்தை ஒரு நிமிடம் ஆராய்ந்து பார். வேண்டா வெறுப்பாக ஜெபிக்கிறாயா? கடமைக்காக ஜெபிக்கிறாயா? வாய் முணுமுணுத்துக் கொண்டே ஜெபித்து முடித்து விடுகிறாயா? காலை ஒன்றிரண்டு நிமிடங்கள் மாத்திரமே அவருடைய சமுகத்தில் முழங்கால் படி

யிட்ட பின்பு அவருக்கு டாட்டா சொல்லி விட்டு வந்து விடுகிறாயா? சிந்தித்துப் பார்!

லூக்கா 6-ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். தேவன் முழு இரவும் ஜெபத்திலே தரித்திருந்தார். வேதம் சொல்கிறது: ''அந்நாட்களிலே, அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, இரவு முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்''
(லூக்கா 6:12).

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று வேதம் சொல்கிறது (I தெச 6:18). நாம் நடந்தாலும், பேசினாலும், குடும்பத்தின் அலுவல்களை கவனித்துக் கொண்டிருந்தாலும், பிரயாணத்தில் இருந்தாலும் நம்முடைய உள்ளம் எப்பொழுதும் பிதாவை நோக்கி உறவாடுகிறதாய் இருக்க வேண்டும். இருண்ட சூழ்நிலைகளானாலும் சரி; ஜெபிக்க முடியாத போராட்டமான பிரச்சனையானாலும் சரி; நம்பிக்கையற்ற சூழ்நிலையானாலும் சரி; ஜெபத்தை மாத்திரம் நிறுத்தி விடாதிருங்கள். சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ணவேண்டும் என்று கிறிஸ்து அருமையாக நமக்கு போதித்திருக்கிறார் (லூக்கா 18:1).

கொரியாவின் எழுப்புதல் பற்றி பால்யாங்கி சோ அவர்களிடம் ஒருமுறை ஒருவர் கேட்டாராம். உங்கள் சபையில் இவ்வளவு எழுப்புதல் பற்றி எரிய காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு அவர் சொன்னார்: அதற்கு மூன்று காரணங்கள் உண்டு. 1 ஜெபம் 2 ஜெபம் 3. ஜெபம். அதுதான் எழுப்புதலின் காரணம். தேவ பிள்ளையே, நீ செய்கிற ஜெபம் பரலோக தேவனுடைய கைகளை அசைக்கிறது என்பதை மறந்து போகாதே.

ஒரு முறை ஒரு சகோதரி ஒரு ஊழியரிடம் போய், ஐயா பத்து ஆண்டுகளாக என்னுடைய கணவனின் இரட்சிப்பிற்காக ஜெபித்து விட்டேன். ஒரு பதிலும் கிடைக்கவில்லை. நான் என்ன செய்ய வேண்டும் என்று

கேட்டாள். அதற்கு அவர் சொன்னார்: பதினோராம் ஆண்டிலே சோர்ந்து போகாதே. மீண்டும் ஜெபி. உன்னுடைய முயற்சியை கைவிட்டுவிடாதே. அப்படியே அவள் ஜெபிக்க ஆரம்பித்தாள். அந்த பதினோராவது ஆண்டில்தான் அவளுடைய கணவனர் இரட்சிக்கப்பட்டார். தேவபிள்ளையே, மனம் சோர்ந்து போகாதே.

இயேசு கிறிஸ்து பலவேளைகளில் தம்முடைய சிஷர்களோடு இணைந்து ஜெபித்த போதிலும், அவர் தனிப்பட்ட ஜெபத்திற்காக அதிக நேரத்தை ஒதுக்கினர் என்பதை நாம் வேதத்திலே வாசித்து தெரிந்து கொள்ளலாம். ஜனக்கூட்டம் அவரை நெருக்கியபோது, அவர் அந்த கூட்டத்திலிருந்து தனியாக விலகிச் சென்று வனாந்தரமான இடத்தைத் தேடி, ஓடி அங்கே பிதாவை நோக்கி ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்தார். இரவு நேரங்களில் தனிமையாக மலையின்மேல் ஏறி ஜெபித்துக்கொண்டிருந்தார். தேவபிள்ளையே, கிறிஸ்துவினுடைய மாதிரியின் ஜெபத்தை பின்பற்றுவாய் என்றால், உனக்கு தனிப்பட்ட ஜெப இடம் அவசியம். உன்னுடைய வீட்டின் ஒரு அறையை ஜெப அறையாக மாற்று. அல்லது தனி அறை கிடைக்கவில்லை என்றால் ஒரு மூலையை கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்து அதை ஜெப இடமாக மாற்று.

உன்னுடைய வேலை ஸ்தலத்தின் ஒரு பகுதியை கர்த்தருக்கென்று கொடுத்து, அங்கே ஜெபம்பண்ணு. உன்னுடைய வீட்டில் ஒரு தோட்டமும், பூங்காவும் இருக்கும் என்றால், அதை கெத்செமனேயாக்கிக் கொள். அங்கே தேவனை வழக்கமாக தொடர்ந்து சந்திக்க தீர்மானம் செய்வாயாக.

இயேசுவின் முன்மாதிரியின்படி ஜெபிப்போமாக. அவர் ஜெபிக்கும்போது தன்னுடைய முழு இருதயத்தையும், முழு பெலத்தையும் ஊற்றி ஜெபித்தார். ஆவியோடும், உண்மையோடும் அவர் ஜெபித்தார். கெத்செமனே தோட்டத்தில் அவர் ஜெபித்தபோது அவ

ருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளோடு கலந்து கீழே விழுந்தது.

இன்றைக்கு அநேகர் ஆடம்பரமாய் ஜெபிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் பாராட்ட வேண்டுமென்று, பார்வைக்காக நீண்ட நேரம் ஜெபங்களை செய்கிறார்கள். எல்லாருக்கும் முன்பாக ஜெபிக்க விரும்புகிறவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலே ஜெபம் குன்றி தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். இது எத்தனை பரிதாபமானது! தேவன் மாய்மாலத்தை வெறுக்கிறார் என்பதை மறந்து போகாதே! உன்னுடைய ஜெபம் உள்ளத்திலிருந்து வராமல் உதட்டிலிருந்து மாத்திரம் வந்து கொண்டிருந்தால், நீ உன்னுடைய நேரத்தை வீணாக்கி, உன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருக்கிறாய் என்றுதான் அர்த்தம். உதட்டில் இருந்து வரும் ஜெபம் ஒருபோதும் பரலோகத்தை எட்டுவதில்லை. அது கர்த்தருக்கு அருவருப்பானது.

கிறிஸ்துவினுடைய முன்மாதிரியான ஜெபத்தில் அவர் சத்துருக்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து ஜெபிக்க வேண்டும் என்பதே தேவனுடைய கட்டளையாய் இருந்தது. உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் (மத் 5:44).

நம்மைத் துன்பப்படுத்துகிற மக்களுக்காக முறுமுறுத்து ஜெபிக்காமல் கர்த்தர் அவர்களை சந்திக்கும்படி, மகிழ்ச்சியாக ஜெபிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்றால், நம்மோடு கை கோர்த்து கர்த்தருடைய ஊழியத்திலே ஒருமனமாய் நிற்பார்களே.

இயேசு எப்படி ஜெபிக்கவேண்டுமென்று போதித்தது மாத்திரமல்ல, அதற்கு அவர் முன்மாதிரியானார் என்பதை நாம் மறந்து போய்விடக் கூடாது. சிலுவையில் அவர்

அறையப்படும்போது, தன்னுடைய வஸ்திரத்தை பங்கிட்டவர்களுக்காகவும் ஜெபித்தார். பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றும் மன்றாடினார் (லூக்கா 23:34). கர்த்தருடைய ஜெபத்தின் விளைவாக அவர்கள் அவரை ஆணிகளால் கடாவினபோதிலும் கூட இரட்சிக்கப்பட்டிருக்கக் கூடும். நாம் பரலோகத்திற்குச் செல்லும் போது அவரை முள் முடி சூட்டி தலையில் அடித்தவர்களும், அவருடைய கைகளிலே ஆணிகளைக் கடாவினவர்களும், விலாவிலே அவரை ஈட்டியால் குத்தினவர்களும் பரலோகத்தில் காணப்படக்கூடும் என்றே நான் விசுவாசிக்கிறேன். ஏனென்றால் இயேசு அவர்களுக்காக சிலுவையில் மன்றாடினாரே. அவருடைய ஜெபம் நிச்சயமாகவே கேட்கப்பட்டிருக்கும்.

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நம்முடைய தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர் மாத்திரமல்ல, அந்த ஜெபங்களுக்கெல்லாம் பதிலளிக்கிறவரும் கூட. அவருடைய பதில் எல்லாம் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. அவர் நம்மை நேசிக்கிறபடியினால், அன்புடன் நம்முடைய சத்தத்திற்கு செவி கொடுத்து நம்முடைய விண்ணப்பங்களுக்கெல்லாம் அவர் பதிலளிக்கிறார். ஆமென்; அல்லேலூயா!

# தமிழ்நாட்டிற்காக ஜெபியுங்கள்!

இந்தியாவில் கிறிஸ்தவ மார்க்க வரலாற்றிலே தமிழ் நாடு முக்கிய இடம் பெறுகிறது. தோமா அப்போஸ்தலன் தமிழ்நாட்டிற்கு வந்தார். தமிழ் நாட்டில் ஊழியம்செய்து இரத்த சாட்சியாக மரித்தார். அந்தத் தோமாவை பின் பற்றிய பழங்கால கிறிஸ்தவர்களின் சந்ததி இன்றும் கேரளாவில் இருக்கிறது.

தமிழ்நாட்டிற்கு பதினாறும் நூற்றாண்டில் சீகன் பால்க் ஐயர் வந்தார். அவர் கிரேக்க மொழியையும், எபிரெய மொழியையும் தெரிந்து வைத்திருந்த படியினாலே நேரடியாக வேதாகமத்தை மொழி பெயர்த்தார். இந்தியாவிலேயே முதன் முதலில் வேதாகமம் வெளிவந்தது தமிழ் மொழியில் தான். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் சாது சுந்தர்சிங் செய்த ஊழியங்கள் மிகவும் மேன்மையானவை. இன்றைக்கும் அவர் எழுதிய நூல்கள் தமிழிலே மிகவும் அதிகமாக விற்பனையாகிறது.

இந்தியாவிலே இன்று ஒரு எழுப்புதல் ஏற்பட்டிருக்குமென்றால் அது தமிழ்நாட்டில் தான். தமிழ் நாட்டில் பற்றியெரிகிற எழுப்புதல் அக்கினி இன்று வட இந்தியாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்காக ஜெபியுங்கள்.

| | |
|---|---|
| தலைநகரம் : | சென்னை |
| ஜனத்தொகை : | 5,42,00,000 |

பேசப்படும் மொழிகள் : தமிழ், தெலுங்கு, கனடா, உருது

அங்குள்ள மொத்த ஜனத்தொகையில்

| | |
|---|---|
| தமிழ் பேசும் மக்கள் : | 82.00% |
| தெலுங்கு : | 09.00% |

| | | | |
|---|---|---|---|
| 33வகை ஆதிவாசிகள் | : | | 02.00% |
| மதம் | : | இந்து : | 89.00% |
| | | முஸ்லீம் : | 05.00% |
| | | கிறிஸ்தவர்கள் : | 05.80% |
| | | இதில் கத்தோலிக்கர் : | 03.37% |
| | | புராட்டஸ்டண்ட் : | 02.43% |

இன்று தமிழ்நாட்டில் ஒரு எழுப்புதல் தீ பற்றியெரிந்துக் கொண்டிருக்கிறது. இந்த எழுப்புதலை ஒருமுகப்படுத்தினால் நிச்சயமாகவே தேசம் துரிதமாகச் சந்திக்கப்படும். தமிழ்நாட்டில் சுவிசேஷகர்கள் மிகுதி, மிஷனெரிகள் மிகுதி, கர்த்தருக்காக கொடுக்கிறவர்களும் மிகுதி. இங்கு ஏராளமான சுவிசேஷ குழுக்கள் வல்லமையாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டு ஊழியர்கள் மத்தியிலே ஒருமனப்பாட்டிற்காகவும், அன்பின் ஐக்கியத்திற்காகவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

தமிழ்நாட்டில் ஏராளமான மிஷனெரி இயக்கங்கள் இயங்கி வருகிறது. இந்திய மிஷனெரி இயக்கம், தேசிய மிஷனெரி இயக்கம், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, ஆசீர்வாத இளைஞர் இயக்கம் போன்ற வல்லமையான மிஷனெரி இயக்கங்கள் பெரிய காரியங்களை கர்த்தருக்காக செய்து வருகின்றன. இந்த இயக்கங்களின் விளைவாக வட இந்தியாவின் மேல் தரிசனமுள்ள அநேக வாலிபர்கள் எழும்பி தியாகத்தோடு வட இந்தியாவிற்கு சென்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு ஏறக்குறைய 33 வகை ஆதிவாசிகள் இருக்கிறார்கள். ஆதிவாசிகளின் மத்தியிலே போதுமான ஊழியம் இல்லை. மலைகளிலே ஒளிந்துக் கிடக்கும் மலைஜாதியினருக்கு இன்னும் சுவிசேஷம் செல்லவில்லை. ஆதிவாசிகளின் மத்தியிலே ஆயிரம் கிறிஸ்தவர்கள் கூட எழும்பவில்லை என்று புள்ளி விபரங்கள் கூறுகிறது.

தமிழ் நாட்டிலே பத்திரிக்கை ஊழியங்கள் மிகவும் அதிகம். அறுநூறுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவ பத்திரிக்கைகள் வெளியாகிறது. இந்த அளவு வேறு எந்த மொழியிலும் வெளியாகவில்லை. பத்திரிகை ஊழியங்களுக்காய் ஜெபித்துக் கொள்ளுங்கள். காலைதோறும் அருமையான தமிழ் வானொலி நிகழ்ச்சிகளை ரேடியோவில் கேட்கலாம். இது இன்னும் வல்லமையாக செயல்பட ஊக்கமாய் ஜெபியுங்கள்.

ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்கு பல சபைகள் எதிர்ப்பு தெரிவித்தன. இன்றைக்கு அவைகளெல்லாம் மாறிவிட்டது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எங்கும் ஊற்றப்பட ஜெபியுங்கள்.

கத்தோலிக்க திருச்சபைகளிலே பெரிய உயிர் மீட்சி இன்றைக்கு நடந்து வருகிறதைக் காணலாம். போதகர் பெர்க்மான்ஸ் அவர்கள் உண்மையும், உத்தமமுமாய் கத்தோலிக்கர்கள் மத்தியிலே ஒரு பெரிய எழுப்புதலையும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மாதம் ஒருமுறை நடத்தும் சுவிசேஷ எழுப்புதல் கூட்டங்களில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட புறஜாதி மக்கள் கலந்துக் கொள்ளுகிறார்கள். இரட்சிக்கப்படுகிறார்கள். தொடர்ந்து எழுப்புதல் அக்கினி கத்தோலிக்கர்கள் மத்தியிலே பற்றியெரியும்படி ஜெபியுங்கள்.

# ஆந்திராவிற்காக ஜெபியுங்கள்!

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | ஹைதராபாத் |
| ஜனத்தொகை | : | 59,800,000 |
| பேசும் மொழிகள் | : | தெலுங்கு, உருது, தமிழ் இன்னும் 150 வகையான மொழிகள் பேசப் படுகிறது. |

இந்த ஜனத்தொகையில் தெலுங்கு

| | | |
|---|---|---|
| பேசும் மக்கள் | : | 86% |
| ஆதிவாசிகள் | : | 4% |
| தமிழ் | : | 5% |
| பிற மொழிகள் | : | 5% |

இங்குள்ள மதம் :

| | | | |
|---|---|---|---|
| இந்து | சதவீதம் | : | 86.00 |
| முஸ்லீம் | ,, | : | 08.00 |
| கிறிஸ்தவர்கள் | ,, | : | 04.45 |
| கத்தோலிக்கர்கள் | ,, | : | 01.35 |
| புராட்டஸ்டண்ட் | ,, | : | 03.10 |

ஆந்திராவில் ஒரு எழுப்புதல் உருவாக ஜெபியுங்கள். ஆந்திராவில் இதுவரையுள்ள ஒவ்வொரு முதலமைச்சர் களும் இந்த மார்க்கத்தை புறக்கணிப்பதிலேயே இருந்திருக் கிறார்கள். ஆந்திராவில் பிரபலமான திருப்பதி கோவில் உண்டு.

இன்று கிறிஸ்தவர்கள் ஆந்திராவில் அதிகமாக இருப் பதற்கு காரணம் 1866-ம் ஆண்டிலிருந்து 1940 வரை யிலும் ஏற்பட்ட ஒரு எழுப்புதல்தான். இன்று அங்கு ஆவிக்குரிய வளர்ச்சிகுறைவானதாகவே காணப்படுகிறது.

ஆந்திராவில் சபை வளர முடியாதபடி விபசாரத்தின் ஆவியும், வேசித்தனத்தின் ஆவியும் விசுவாசிகளுக்கு

விரோதமாய் போராடிக் கொண்டிருக்கிறது. அங்குள்ள போதகர்கள் எழுப்புதலடைய ஜெபியுங்கள்.

ஆந்திராவிலுள்ள கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் கீழ் ஜாதியாக தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே உயர்ந்த ஜாதியில் உள்ளவர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு பயப்படுகிறார்கள், வெட்கப்படுகிறார்கள்.

இங்கு 36 வகையான ஆதிவாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் லம்பாடிகள், கோயா, கோண்டா, எருக்கேலா போன்ற மொழிகளைப் பேசுகிறார்கள். இந்த மக்கள் மத்தியிலே அசரியர் பிஷப் அவர்கள் வல்லமையான ஊழியத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இன்றைக்கு "இந்திய சுவிசேஷ இயக்கம்" இவர்கள் மத்தியிலே வல்லமையான ஊழியம் செய்துக்கொண்டு வருகிறது.

ஆந்திர ஊழியங்களுக்காக பல வெளிதேசங்கள் கோடி கோடியான, லட்சம் லட்சமான பணங்களை வாரி இறைத்தும் அவைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் முன் மாதிரியான வாழ்க்கை வாழாததினால் அந்தப் பணமெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகவே போய்க்கொண்டிருக்கிறது. வெளி தேசத்திலிருந்து பண உதவி பெறும் இயக்கங்கள் ஊர்த்தருக்கு உண்மையும் உத்தமுமாய் உழைக்கும் படி ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# கேரளாவிற்காக ஜெபியுங்கள்!

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | திருவனந்தபுரம் |
| ஜனத்தொகை | : | 2,84,00,000 |
| பேசப்படும் மொழிகள் | : | மலையாளம், தமிழ் இன்னும் 62 வகையான பாஷைகள் |
| மக்கள் | : | மலையாளிகள் சதவீதம் 95 |
| | | தமிழர்கள் ,, 04 |
| | | ஆதிவாசிகள் ,, 1.3 |

இங்குள்ள மதம்

| | | |
|---|---|---|
| இந்து | சதவீதம் | : 58. 10 |
| முஸ்லீம் | ,, | : 21. 30 |
| கிறிஸ்தவர்கள் | ,, | : 20. 40 |
| சிரியன் ஆர்த்தோடாக்ஸ் | ,, | : 09. 10 |
| மார்த்தோமா | ,, | : 04. 50 |

கேரளாவிற்காக ஊக்கமாய் ஜெபியுங்கள். தென்னிந்தியாவிலேயே அதிகமாய் கிறிஸ்தவர்கள் காணப்படுகிற இடம் கேரளா தான். ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்பு அங்கே நல்ல எழுப்புதல் தீ பற்றியெரிந்துக் கொண்டிருந்தது. வல்லமையான பிரசங்கிமார்கள் அங்கேயிருந்து எழும்பி உலகமெங்கும் சென்றூர்கள். இன்று அந்த எழுப்புதல் சற்று தணிந்திருக்கிறது.

கேரள கிறிஸ்தவர்கள் செல்லுகிற இடங்களில் எல்லாம் கர்த்தருடைய நாமத்தை அறிவித்துக்கொண்டே வருகிறார்கள். அவர்கள் எங்கெங்கு செல்லுகிறார்களோ அங்கங்கே ஆலயங்களையும் ஏற்படுத்துகிறார்கள்.

கேரளாவில் தான் சாது, சந்நியாசிகள், ஜீப்பாக்கள், மிக அதிகம். இலங்கை பெந்தேகொஸ்தே மிஷன்களிலும்

இந்திய பெந்தேகொஸ்தே மிஷன்களிலும் மலையாள ஊழியர்கள் தான் அதிகம்.

கேரளாவிலே நாயர் என்றுச் சொல்லப்படுகிற ஒரு ஜாதி மிகவும் அதிகமாக இருக்கிறது. அவர்கள் கர்த்தருக்குள் வருவார்களென்றால் கேரளா மிகவும் துரிதமாக சந்திக்கப்படும். கர்த்தருடைய சுவிசேஷம் உயர் ஜாதி என்றுச் சொல்லப்படுகிற மக்கள் மத்தியிலே துரிதமாக பரவ ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கேரளாவில் கம்யூனிஸ்டுகள் அதிகம். ஓயாமல் சிகப்பு கொடியை தூக்கி புரட்சி போராட்டங்கள் நடத்துகிறார்கள். கடவுள் இல்லையென்ற இயக்கம் அதிகமாக பரவிக் கொண்டிருக்கிறது. அவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.

கேரளாவிலுள்ள 68 வகையான ஆதிவாசிகளின் மத்தியிலே ஏழு வகை ஆதிவாசிகள் மாத்திரமே கிறிஸ்துவினண்டை வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் போதுமான ஆலயம் இல்லாமலிருந்தது.

மலப்பாரில் மாப்பிலாஸ் என்ற முஸ்லீம்கள் ஏறக்குறைய ஐம்பத்தைந்து லட்சம் பேர் வாழ்கிறார்கள். அவர்கள் சுவிசேஷத்திற்கு விரோதமாக இருக்கிறார்கள். சுவிசேஷம் பரவுவதற்கு மிகுந்த தடைகளை விதிக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே மகிமையான தேவனுடைய ஊழியம் நடக்கும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# உன் வேண்டுதல் கேட்கப்பட்டது!

''உன் வேண்டுதல் கேட்கப்பட்டது!'' என்று கர்த்தருடைய தூதன் நம்மிடம் சொல்லும்போது அது நமக்கு எத்தனை சந்தோஷமுமாய் மகிழ்ச்சியுமாய் இருக்கும்! (லூக்கா 1:13).

நீண்ட காலம் குழந்தை இல்லாமல் சகரியா எவ்வளவு தவித்திருந்திருப்பான்! எவ்வளவு வேண்டுதல் செய்திருப்பான்! எத்தனை பேரிடம் சொல்லி எனக்காக ஜெபியுங்கள், கர்த்தர் எனக்கு ஒரு ஆசீர்வாதமான சந்ததியைத் தரும்படி வேண்டிக்கொள்ளுங்கள் என்றெல்லாம் கேட்டிருந்திருப்பான்.

அவன் ஆசாரிய வம்சத்தில் தோன்றியபடியினால் அநேகருக்காக விண்ணப்பம் பண்ணும்படி அழைக்கப்பட்டவன். ஜனங்களுக்காக தேவனுடைய சமுகத்திலே பரிந்து பேசும்படியாக தெரிந்து கொள்ளப்பட்டவன். ஆனால் அவனுடைய வாழ்க்கையிலோ ஜெபத்திற்கு பதில் இல்லை. அவனுடைய வேண்டுதலுக்கு தேவன் செவி சாய்க்காமல் மௌனமாகவே இருந்தார்.

வேதம் சொல்கிறது, ''அவன் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின்படியேயும் ஜீவித்து வந்தான். ஜனங்களுக்கு முன்பாக குற்றமற்றவனாக நடந்தவன். தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவனாயிருந்தான்'' (லூக் 1:6).

அவன் அடிக்கடி யோசித்திருக்கக்கூடும். என்னிடத்தில் என்ன குறை? ஏன் கர்த்தர் என்னுடைய ஜெபத்திற்கு பதிலளிக்கவில்லை? ஏன் கர்த்தர் மௌனமாய் இருக்கிறார்? என்றெல்லாம் எண்ணி அவன் கலங்கியிருந்திருக்கக் கூடும்.

சமீபத்தில் பெற்றி பாக்ஸ்டர் என்ற சகோதரியினுடைய சாட்சியை வாசித்தேன். ஒரு விபத்திலே அவளுடைய சரீரம் சிக்கி நொய்ந்துபோனது. எலும்புகள் முறிவடைந்தன. பல சிகிச்சைகள் அளித்தும் எதுவும் பிரயோஜனம் இல்லை. மரணத்தை அவள் வாஞ்சித்தாள் ஆனால் மரணமோ அவளுக்குத் தூரமாய்ப் போனது. ஒவ்வொரு நாளும் நரக வேதனையை அவள் அனுபவிக்க வேண்டியதாயிற்று. அந்த ஆஸ்பத்திரி படுக்கையில்தான் அவள் இரட்சிக்கப்பட்டாள், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாள். பல நாட்கள், பல மாதங்கள் அவள் ஊக்கமாக ஜெபித்தாள். ஒருநாள் திடீரென்று கர்த்தருடைய தேவதூதன் அவளிடத்தில் தோன்றினார், ''கர்த்தர் உன்னை சுகமாக்கத் கொண்டிருக்கிறார்; உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. இன்ன மணி நேரத்தில், இன்ன நாளில் உன்னை கர்த்தர் குணமாக்குவார்'' என்று தேவதூதன் சொல்லிச் சென்றான்.

அந்தப்படியே, அவள் அந்த நாளுக்காக ஆவலோடு காத்திருந்தாள். குறிப்பிட்ட மணி நேரம் வந்தது நிமிடங்கள் வந்தது. வினாடியும் வந்தது. உயிர்ப்பிக்கும் தேவனுடைய வல்லமை அற்புதமாய் இறங்கினது! படுக்கையிலிருந்து அவள் தூங்கி எறியப்பட்டாள். இமைப்பொழுதிலே பூரண சுகமடைந்தாள்.

தேவபிள்ளையே, அன்று சகரியாவோடும் தேவதூதன் சொன்ன வார்த்தைகள் எத்தனை சந்தோஷமானவை! ''சகரியாவே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது!''

தேவபிள்ளையே, நம்முடைய தேவன் ஜெபத்தை கேட்கிறவர் மாத்திரமல்ல, அவர் ஜெபத்திற்கு பதிலளிக்கிறவரும் கூட. அவருடைய அற்புதங்கள் எல்லாம் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் நிச்சயமாகவே செய்வார்.

கர்த்தர் உன் ஜெபத்திற்கெல்லாம் பதிலளிக்க வேண்டிய நேரம் வந்தது. எனவே இந்த கடைசி வினாடி

நேரத்தில் சோர்ந்து போகாதே. அநேகர் காத்திருந்து ஜெபிக்கிறார்கள். ஆனால் தொடர்ந்து ஜெபிப்பதில்லை. பெற்றுக்கொள்ளும் வரையிலும் ஜெபிப்பதில்லை.

நாம் முழங்காலூன்றி ஜெபிக்க ஆரம்பிக்கும்போது, கர்த்தரிடமிருந்து பதில் கிடைக்கும் வரையிலும், ஜெபத்தில் நம்முடைய ஆத்துமா பரலோகத்திற்கு நீண்டு தேவ சிங்காசனத்தைத் தொடும் வரையிலும் நம்முடைய ஜெபத்தை நாம் நிறுத்தவே கூடாது.

ஏசாயா தீர்க்கதரிசி சொல்கிறார்: ''அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரைக்கும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள்'' (ஏசா 62:7). வேறு வார்த்தைகளில் சொன்னால் கர்த்தர் உன்னுடைய வேண்டுதல்களையெல்லாம் கேட்டு பதிலளிக்கிற வரையிலும் நீங்கள் தேவனை அமர்ந்திருக்க விடாதிருங்கள். உன்னுடைய ஜெபம் உலர்ந்த எலும்புகளை ஒன்றாக சேர்க்கட்டும்! உன்னுடைய ஜெபம் பரலோகத்தின் தேவ தூதனை கீழே இறக்கட்டும்! உன் ஜெபம் அக்கினியால் உத்தரவளிக்கிற தேவனே தேவன் என்று நிரூபிக்கட்டும்! உன்னுடைய ஜெபம் பரலோகத்தின் பலகணிகளைத் திறக்கிறதாகவும், மூடுகிறதாகவும் விளங்கட்டும்!

தேவபிள்ளையே, உலகத்தில் ஒரு மனுஷன் செலவழிக்கக்கூடிய மகா மேன்மையான நேரம் ஒன்று உண்டென்றால் அது பரலோக பரம பிதாவினிடத்தில் மிகவும் நெருக்கி உறவாடுவதுதான். இதுவே தேவன் இந்த பூமியில் நமக்களித்திருக்கிற பெரிய சிலாக்கியம் என்று நான் கருதுகிறேன்.

நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் கிருபாசனத்தண்டையிலே தைரியமாய் கிட்டிச் சேரக்கடவோம்.

லூக்கா எழுதிய சுவிசேஷம் 18-ஆம் அதிகாரத்தை திரும்பத் திரும்ப வாசித்துப் பாருங்கள். நம்முடைய

வேண்டுதலை நாம் தொடர்ந்து தேவனிடத்திற்கு நேராய் ஏறெடுத்து, ஜெபத்திற்கு பதில் கிடைக்கிற வரையிலும் ஜெபிக்க வேண்டும். பதில் கிடைக்கிற வரையிலும் நிறுத்தாமல் இருக்கவேண்டும் என்பதை பல உதாரணங்களின் மூலமாக கர்த்தர் விளக்கி காண்பிக்கிறார் 1. விதவையின் விண்ணப்பம் 2. ஆயக்காரனின் மனமுடைந்த ஜெபம் 3. பிறவிக் குருடனின் மன்றாட்டு.

1. **விதவையின் விண்ணப்பம்:-**

ஒரு விதவை விண்ணப்பம் செய்தாள். அவளுடைய விண்ணப்பம் ஒரு நியாயாதிபதியினிடத்திற்குப் போனது. அவன் தேவனுக்கு பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாய் இருந்தான்.

அந்த விதவை தினந்தோறும் அவனிடத்தில் போய் தன்னுடைய விண்ணப்பங்களை சமர்ப்பித்துக்கொண்டே இருந்தபடியினாலே கடைசியில் அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்தான். "இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால் அவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடிக்கு அவளுக்கு நியாயம் செய்யவேண்டுமென்று தீர்மானித்தான்" (லூக்கா 18:5). ஆம், அந்த விதவையின் வேண்டுதல் கேட்கப்பட்டது. அந்த விதவை இரக்கம் பெற்றுக் கொண்டாள். வேதம் சொல்கிறது, "அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?" (லூக்கா 18:7).

சிலருடைய ஜெபம் சிறுபிள்ளைகளின் குறும்பாக இருக்கிறது. ஒரு வீட்டில் ஒரு சிறு குழந்தை போய் தட்டுகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த வீட்டிலுள்ளவர்கள் வந்து கதவை திறப்பதற்குள் பிள்ளைகள் ஓடிவிடுகிறது. இப்படி திரும்பத் திரும்ப செய்தால் வீட்டுக்காரனுக்கு கோபம் தான் உண்டாகும்.

அதுபோலவே, அநேகர் தேவசமுகத்தில் நின்று தட்டு கிறார்கள். ஆனால் கர்த்தர் அவர்களுக்கு பதிலளிக்க வரும் போது அவர்கள் அங்கே இருப்பதில்லை. அவர்கள் தாங்கள் செய்த விண்ணப்பத்தையே மறந்து போய் விடுகிறார்கள் பிறகு எப்போதாவது பிரச்சனைகள் வரும் போது தேவ சமுகத்தில் போய் தட்டுகிறார்கள். பிறகு ஓடிப்போய் விடு கிறார்கள். இப்படிப்பட்டவர்களால் தேவனிடத்திலிருந்து எந்தப் பதிலையும் பெற முடியாது. தேவபிள்ளையே உன் வேண்டுதல் கேட்கப்பட்டது என்று கர்த்தர் சொல்கி வரையிலும், நீ தட்டிக் கொண்டேயிருப்பாயாக! வேண்டு தல் செய்து கொண்டே இருப்பாயாக!

2 ஆயக்காரனின் மனமுடைந்த ஜெபம்:-

அதே லூக்கா 18-ஆம் அதிகாரத்தில் ஒரு ஆயக்கார னுடைய ஜெபத்தையும் நாம் காண்கிறோம் வேதம் அவனு டைய ஜெபத்தை குறித்துச் சொல்லும்போது ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெ டுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான் (லூக்கா 18:13). அவனுடைய வேண்டுதல் உடனே கேட் கப்பட்டது தேவன் அவனை நீதிமானாக்கினார். அவன் சந் தோஷமாய் தன்னுடைய வீட்டிற்கு திரும்பிச் சென்றான்.

எப்படி அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டது அவ னுக்குத் தெரிந்தது என்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம். அருமையான தேவனுடைய பிள்ளையே, கர்த்தர், நீ முழங் காலூன்றி ஊக்கமாய் ஜெபிக்கும்போது உன்னுடைய இருதயத்தின் ஆழத்தில் உன் ஜெபம் கேட்கப்பட்டது என்ற உணர்வைத் தருகிறார். உன்னுடைய மனசாட்சியில் பாவமன்னிப்பின் நிச்சயம் உண்டாகிறது. உன்னுடைய உள்ளத்தின் ஆழத்தில் இரட்சிப்பின் வல்லமையும் களிகூரு தலும் ஏற்படுகிறது. அப்போது கர்த்தர் உன்னுடைய ஜெபத்தை கேட்டார் என்பதை நீ அறிந்துகொள்கிறாய் ஒருவேளை வெளிப்பிரகாரமான கண்களினாலே பதில் கிடைத்ததைக் காண்பதற்கு சில மாதங்களும் நாட்களும்

ஆனாலும்கூட கர்த்தர் உன்னுடைய ஜெபத்தை கேட்டு விட்டார் என்று உன்னுடைய உள்ளத்தில் ஒரு சந்தோஷமும் திருப்தியும் உண்டாகும்போது நீ கர்த்தரை நன்றியோடு துதிக்க ஆரம்பித்துவிடு. பிதாவே நீர் என் ஜெபத்தைக் கேட்டீர். என்னுடைய ஜெபத்திற்கு பதில் தந்து விட்டீர் என்று சொல்லி அவருக்கு நன்றி செலுத்து.

வேதம் சொல்கிறது: மனுஷனுடைய ஆவி, தேவன் தந்த தீபமாய் இருக்கிறது. ஆவிக்குரியவன் தேவனுடைய காரியங்களை நிதானித்து அறிகிறதைப் போல ஜெபிக்கிற ஒவ்வொரு தேவனுடைய மனுஷனும் எப்போது கர்த்தர் தன்னுடைய ஜெபத்தைக் கேட்டு அங்கிகரித்தார் என்பதை புரிந்து கொள்ளுகிறான். தன்னுடைய உள்ளத்தின் ஆழமும் அவனோடு கூட உன் ஜெபம் கேட்கப்பட்டது என்று சாட்சியிடுகிறது.

ஆயக்காரன் ஜெபித்தான். வேதம் சொல்கிறது: அவன் நீதிமானாக்கப்பட்டவனாய் தன்னுடைய வீட்டிற்கு திரும்பி வந்தான் (லூக் 18:14)

அவன் நீதிமானாக்கப்பட்டதற்கு வெளிப்பிரகாரமான அடையாளங்கள் ஒன்றும் இல்லை. வெளியரங்கமான சான்றுகளும் இல்லை. ஆனால் அவனுடைய உள்ளம் கர்த்தர் அவனை நீதிமானாக்கியதை மகிழ்ச்சியுடன் அறிவித்தது. தன்னுடைய வேண்டுதல் கேட்கப்பட்டதை அவனுடைய உள்ளத்தின் ஒவ்வொரு பகுதியும் சாட்சியிட்டது. தேவ பிள்ளையே, அந்த தேவன் உன்னுடைய தேவன். தேவன் உன்னை நீதிமானாக்குகிறவர். உன்னுடைய ஜெபத்தைக் கேட்டு உனக்கு பதிலளிக்கிறார் என்பதை மறந்து போகாதே.

3. பிறவிக் குருடனின் மனமுடைந்த மன்றாட்டு:-

ஒரு பிறவிக் குருடனின் ஜெபத்தை லூக்கா 18-ஆம் அதிகாரத்தின் கடைசி பகுதியில் நாம் பார்க்கிறோம். அவனுடைய மன்றாட்டு வேதனையான ஒரு மன்றாட்டு

தான். பிறந்ததிலிருந்தே பார்வையில்லாவிட்டால் அது எத்தனை வேதனையாய் இருக்கும்? நமக்கு ஒரு மாதத்திற்கு கண் தெரியாமல் போய் விடும் என்றால் நாம் அடைகிற வேதனை எத்தனை கொடுமையாய் இருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

அவன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்ய ஆரம்பித்தபோது மற்றவர்கள் எல்லாரும் அவனை அதட்டினார்கள், அதைரியப்படுத்தினார்கள். முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள் என்று வேதம் சொல்கிறது. ஆனால் அவனோ தன் ஜெபத்தை நிறுத்தவில்லை. மன்றாட்டின் சத்தத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை. தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். முடிவில் அவனுடைய வேண்டுதல் கேட்கப்பட்டது. இயேசு நின்றார். அவனை தம்மிடத்தில் கொண்டு வரும்படி சொன்னார். நீ பார்வையடைவாயாக. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று இயேசு சொன்னபோது எத்தனை மகிழ்ச்சியான சம்பவம் நிகழ்ந்தது!

உடனே அவன் பார்வையடைந்தான். அவனுடைய கண்கள் தேவக்குமாரனை முகமுகமாய் நேருக்கு நேர் கண்டது. ஜெபத்திற்குப் பதில் கிடைத்து. கண்கள் திறந்தது மட்டுமல்ல, கிறிஸ்துவைக் காணும் பாக்கியமும் பெற்றுக் கொண்டான். இரட்டிப்பான ஆசீர்வாதம் அல்லவா? தேவபிள்ளையே, ஜெபத்தைக் கேட்கிறவர் உன் அருகிலேயே இருக்கிறார். உனக்கு சமீபமாகவே இருக்கிறார். உடனே பதில் செய்ய அவர் ஆவலுள்ளவராகவே இருக்கிறார்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார்.

A. DEVARAJ PITCHAIMONI, M. Sc.
MUNICIPAL WOMEN CHILDREN,
HOSPITAL QUARTERS,
TIRUNELVELI-627006.



# கர்நாடகாவிற்காக ஜெபியுங்கள்!

தலைநகரம் : பெங்களூர்

மொத்த ஜனத்தொகை : 4,00,00,000

பேசும் மொழிகள் : கனடா மற்றும் 19 வகையான மொழிகள்

ஜனங்கள் : பெரும்பாலும் கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ் பேசும் மக்கள், மராத்தி பேசும் மக்கள், இன்னும் 53 வகையான ஆதிவாசிகள்

மதத்தினர் :

| | | |
|---|---|---|
| இந்து | சதவிதம் | 85.70 |
| முஸ்லீம் | ,, | 11.30 |
| கிறிஸ்தவர்கள் | ,, | 02.10 |
| இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 01.40 |
| புராட்டஸ்டண்ட் | ,, | 00.70 |

கர்நாடகா மாநிலத்தில் சுவிசேஷத்திற்கு பல திட்டமிட்ட எதிர்ப்புகள் உண்டு. கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக இயங்கும் பல இயக்கங்கள் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. கர்த்தர் அந்தகாரத்தின் வல்லமையை உடைக்க ஜெபியுங்கள்.

கர்நாடகா மாநிலம் முழுவதிலும் பெங்களூர் பட்டணமே இன்று எழுப்புதல் அடைந்த நிலைமையில் இருக்கிறது. ஏராளமான நற்செய்தி பெரு விழாக்களும், பேரின்ப பெரு விழாக்களும், சுவிசேஷக் கூட்டங்களும் இங்கு நடைபெறுகிறது. எழுப்புதலடைந்தவர்கள் கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க ஜெபியுங்கள்

கர்நாடகா முழு மாநிலத்திலும் இரண்டேயிரண் மாவட்டத்தில் மாத்திரமே கிறிஸ்தவர்கள் அதிகமா இருக்கிறார்கள். அதாவது பெங்களூர் மாவட்டத்திலும் தெற்கு கர்நாடகா மாவட்டத்திலும் கிறிஸ்தவர்கள் அதிகம். மற்ற மாவட்டங்களோ வெறுமையாய், கர்த் தரை அறியாமல் இருக்கிறது.

கர்நாடகாவில் இயங்குகிற மிஷனெரி பணிக்கா ஜெபியுங்கள். பெங்களூரை மையமாக வைத்து ஊழியம் செய்கிற ஐ.இ.எம். (I.E.M.) சங்கத்திற்காகவும் அதன் தலைவராக இருக்கிற தியோடர் வில்லியம்ஸ் அவர்களுக் காகவும் ஜெபியுங்கள். டாக்டர். கிரீன் ரோஸ் அவர்கள் பெங்களூரை மையமாக கொண்டு முஸ்லீம்கள் மத்தியிலே ஊழியம் செய்து வருகிறார்கள். அவர்களுக்காகவும் ஊக்க மாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## கோவாவுக்காக ஜெபியுங்கள் :-

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | பனாஜி |
| மொத்த ஜனத்தொகை | : | 1,30,00,000 |
| முக்கிய மொழி | : | மராத்தி, கொங்கனி |
| ஜனங்கள் | : | பெரும்பாலும் கோவாவை சேர்ந்தவர்கள். |

| | | |
|---|---|---|
| மதங்கள் : இந்துக்கள் | சதவீதம் | 64.00 |
| முஸ்லீம்கள் | ,, | 03.80 |
| கிறிஸ்தவர்கள் | ,, | 32.00 |
| இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 31.90 |
| புராட்டஸ்டண்ட் | ,, | 00.10 |

கோவாவின் எழுப்புதலுக்காக ஜெபியுங்கள். இது கத்தோலிக்கர்களின் கோட்டையாக இருக்கிறபடியினால் பழைய பாரம்பரியங்களும், பழக்க வழக்கங்களும் பின்பற் றப்படுகிறது. மற்ற சபைகள் வளர்ச்சியடையாமல் குன்றி போயிருக்கிறது.

கோவா பட்டணத்தின் மக்களில் பெரும் பகுதியினர் அபிசேஷத்திற்கு தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே தேவன் தேவ ஊழியக்காரர்களை எழுப்பி துரிதமாக கோவா சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**மஹாராஷ்டிராவிற்காக ஜெபியுங்கள்:**

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | பம்பாய் |
| ஜனத்தொகை | : | 7,02,00,000 |
| பேசும் மொழிகள் | : | மராத்தி, குஜராத்தி, சிந்தி இன்னும் 223 வகையான மொழிகள். மொத்தம் 162 வகையான ஆதிவாசிகள் இங்கேயிருக்கிறார்கள், |

| | | | |
|---|---|---|---|
| மதம் : | இந்துக்கள் | சதவீதம் | 82.00 |
| | முஸ்லீம்கள் | ,, | 09.60 |
| | புத்தர்கள் | ,, | 06 30 |
| | ஜெயின் | ,, | 01.50 |
| | சீக்கியர்கள் | ,, | 00.20 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 01.30 |
| | இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 01.17 |
| | புராட்டஸ்டண்ட் | ,, | 00.13 |

மஹாராஷ்டிராவின் எழுப்புதலுக்காக ஜெபியுங்கள். மகாராஷ்டிராவை மையமாகக்கொண்டு சில சேனை இயக்கம் கிறிஸ்தவ சபைகளை பாழாக்கிக் கொண்டிருக்கிறது மட்டுமல்லாமல், தமிழர்களுக்கு பெரிய எதிரியாக விளங்குகிறது. அதன் விளைவாக தமிழ் நாட்டில் இருந்துச் செல்லுகிற மிஷனெரிகள் அநேகர் இரத்த சாட்சியின் அனுபவங்களுக்குள் கடந்துச் செல்கிறார்கள்.

இங்குள்ள சபைகளில் எந்த எழுப்புதலும் இல்லை. மொத்தம் கிறிஸ்தவர்களில் நாற்பது சதவீதத்தினர் எந்த

ஆலயத்திற்கும் செல்வதில்லை எழுப்புதல் அடைந்த சபை
கள் பாம்பேயிலும், புனேவிலும் மட்டுமேயிருக்கிறது. மற்
படி மாநிலத்தைச் சூழ இருள்தான் சூழ்ந்திருக்கிறது.

கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்கள் மத்தியிலே செ
யப்படுகிற ஊழியங்கள் துரிதப்படவும், ஏராளமான ஊழி
யர்கள் அங்கே செல்லவும் ஜெபியுங்கள். அறுவடை மிகு
யாக இருக்கிற ஒரு மாநிலம். ஆனால், போதுமான வேலை
யாட்களோ அங்கேயில்லை.

அங்கேயிருக்கிற மொத்த ஆதிவாசிகளின் ஜாதியின்
எண்ணிக்கை 162 ஆகும். ஆதிவாசிகளின் மொத்த ஜனத்
தொகை நாற்பது லட்சத்திற்கும் அதிகமானது. அவ்வளவு
அதிகமாக இருந்தும் ஐம்பதாயிரம் ஆதிவாசிகள்கூட
இன்னும் கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிந்துக்கொள்ள
வில்லை. கர்த்தர் வானத்தை திறந்து தம்முடைய வல்ல
மையை ஊற்றி இந்த மக்களை சந்திக்கும்படி ஜெபியுங்கள்

பம்பாய் பட்டணத்தில் ஏறக்குறைய ஒரு கோடிமக்க
ளுண்டு. இதிலுள்ள கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர்
கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். சுவிசேஷம் அறிவிக்கும்
திருச்சபைகள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. கர்த்தர்
அங்கே ஒரு பெரிய எழுப்புதலை ஏற்படுத்தும்படி ஊக்க
மாய் ஜெபியுங்கள்.

## குஜராத்துக்காக ஜெபியுங்கள்:-

தலைநகரம் : காந்தி நகர்

ஜனத்தொகை : 3,80,00,000

மொழிகள் : குஜராத்தி, சிந்தி, உருது, ஹிந்தி,
மராத்தி, இன்னும் 60 வகை மொழிகள்.

மக்கள் : 30 வகையான ஆதிவாசிகள் இங்கே
வாழுகிறார்கள். அவர்கள் மொத்த ஜனத்
தொகையில் 14 சதவீதம் இடம் வகிக்கி
றார்கள். குஜராத்திகள் 80 சதவீதம்

மற்றவர்கள் 6 சதவிதம்

| | | | |
|---|---|---|---|
| ..தம் : | ஹிந்தி | சதவிதம் | 89 30 |
| | முஸ்லீம்கள் | ,, | 08.60 |
| | ஜெயின் | ,, | 01.40 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 00 39 |
| | கத்தோலிக்கர்கள் | ,, | 00.27 |
| | புராட்டஸ்டண்ட் | ,, | 00.12 |

கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்த போதிலும் கூட திருச்சபைகளில் சிறிய அக்கினிச் ..டர் ஆங்காங்கே எழும்பியிருக்கின்றன. கல்லூரி மாண ..ர்கள் மத்தியிலே செய்யப்படுகிற ஊழியம் நல்ல பலனை ..ருகிறது. தொடர்ந்து சபையின் எழுப்புதலுக்காக, சபை ..ள் ஏராளம் கட்டப்படும்படியாக வேண்டிக் கொள் ..ளுங்கள்.

இங்கே சௌராஷ்டிரா மக்கள் வாழுகிறார்கள். ஏறக் ..றைய ஒரு கோடி மக்கள் சௌராஷ்டிரர்கள். அவ்வளவு அதிகமாக இருந்த போதிலுங்கூட கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் மிகவும் குறைவு. அந்த ஒரு கோடியிலும் ..ன்றுயிரத்திற்கும் குறைவானவர்கள்தான் கிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள். அறிந்த அவர்களும் பெயர் கிறிஸ் ..வ வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் ..ள் மத்தியிலே கர்த்தர் ஊழியர்களை எழுப்பும்படி ஜெபியுங்கள்.

விசேஷமாக குஜராத்திலே மெதடிஸ்ட் மிஷனெரி இயக்கம் நல்ல வேலை செய்து கொண்டிருக்கிறது. வட இந்திய திருச்சபை மக்கள் குஜராத்தின் மேல் கண்ணும் ..ருத்துமாக உழைக்கிறார்கள். குஜராத்தி மிஷனெரி இயக் ..ம் என்ற இன்னொரு இயக்கமும் செயல்படுகிறது. அவர் ..ள் ஏராளமான மிஷனெரிகளை குஜராத்தின் பல பகுதி ..ளுக்கு அனுப்ப ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நண்பர் சுவிசேஷ ஜெபக் குழு இளம் வாலிப மிஷ ..னெரிகளை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் தியாகமாய்

இந்த இடங்களிலே ஊழியம் செய்து வருகிறார்கள். கர்த்தர் அந்த ஊழியங்களை ஆசீர்வதிக்கும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள். அறுவடை மிகுதியாய் இருக்கிறது. சபைகள் பெலன் கொள்ள கர்த்தரை அறிந்துக் கொள்ள ஊக்கமாய் ஜெபியுங்கள்.

## ஒரிசாவிற்காக ஜெபியுங்கள்:-

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | புவனேஸ்வர் |
| ஜனத்தொகை | : | 3,9,400,000 |
| மொழிகள் | : | ஒரியா இன்னும் 62 வகையான மொழிகள் பேசும் ஆதிவாசிகள் இங்கே உண்டு. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனங்கள் | : | ஒரியர்கள் | சதவீதம் | 76 00 |
| | | ஆதிவாசிகள் | ” | 20.50 |
| | | மற்றவர்கள் | ” | 03.50 |
| மதங்கள் | : | இந்துக்கள் | ” | 95.00 |
| | | முஸ்லீம்கள் | ” | 01.60 |
| | | கிறிஸ்தவர்கள் | ” | 01.90 |
| | | இதில் கத்தோலிக்கர்கள் | ” | 01.05 |
| | | புராட்டஸ்டண்ட் | ” | 00.85 |

இங்கே கிறிஸ்தவ மார்க்கத்திற்கு விரோதமான தடை சட்டங்கள் இருக்கிறது. மதம் மாற்றம் கூடாது என்றும் ஞானஸ்நானம் கொடுக்க கூடாது என்றும் அரசாங்கம் அதிகாரிகளிடம் பல தடைகளை விதித்திருக்கிறார்கள். என்றாலும் கூட இங்கே உயர் ஜாதியாக கருதப்படும் இந்துக்கள் வேகமாக இயேசுவண்டை வந்துக் கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களில் இயேசு என்ற வார்த்தை ஒலிக்கப்படவேயில்லை. கொஞ்சமும் கிறிஸ்துவை அறியாதவர்களாய் மக்கள் வாழ்ந்து, மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

இங்குள்ள ஜனங்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். பஞ்சம் வரும்போது பல கிராமங்கள் ஏழ்மையின் நிமித்தம் பட்டினியால் செத்து மடிகின்றன.

இங்குள்ள 62 வகையான ஆதிவாசிகளுக்குள்ளே ஒரு கிறிஸ்தவர்கள் கூட இல்லாத ஆதிவாசி ஜாதியினர் ஏராளம் இருக்கிறது. ஒன்பதே ஒன்பது ஆதிவாசி இயக்கங்களுக்குள் தான் கிறிஸ்தவர்கள் ஒரு சிலர் காணப்படுகிறார்கள். பெருவாரியாக பேசப்படுகிறமொழிகளிலே பதினைந்து மொழிகளில் இதுவரை வேதாகமும், சுவிசேஷ புத்தகங்களும் இன்னும் அச்சிடப்படவில்லை.

இங்குள்ள திருச்சபைகள் தூங்கி வழிகின்றன. போதுமான எழுப்புதல் இல்லை. வருமானம் இல்லை. கிறிஸ்தவர்கள் தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

நூறு ஆண்டுகளுக்கும் முற்பட்ட அநேகம் திருச்சபைகள் உண்டு. அவைகள் பெரும்பாலும் மூடப்பட்டே கிடக்கின்றன. கர்த்தருடைய வல்லமை அவர்களை உயிர்ப்பிக்கும்படி ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**பஞ்சாபிற்காக ஜெபியுங்கள்:-**

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | சண்டிகார் |
| ஜனத்தொகை | : | 1,87,00,000 |
| மொழிகள் | : | பஞ்சாபி, ஹிந்தி, உருது இன்னும் 37 வகையான மொழிகள். இங்குள்ள ஜனங்களில் பஞ்சாபியர் 70 சதவீதம், இன்னும் 30 வகையான ஆதிவாசிகள் இங்கே உண்டு. |

| | | | | |
|---|---|---|---|---|
| மதங்கள் | : | சீக்கியர்கள் | சதவீதம் | 60.70 |
| | | இந்துக்கள் | ,, | 36.00 |
| | | முஸ்லீம்கள் | ,, | 01.00 |
| | | கிறிஸ்தவர்கள் | ,, | 01.10 |
| | | இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 00.14 |
| | | புராட்டஸ்டண்ட் | ,, | 00.87 |

பஞ்சாபிற்காக ஊக்கமாய் ஜெபியுங்கள். தற்போது பஞ்சாப் பற்றியெரிந்துக்கொண்டு இருக்கிறது என்றுத் தான் சொல்ல வேண்டும். சீக்கிய தீவிரவாதிகள் இங்கே உண்டு. இந்தியாவிலிருந்து தனியாக பிரிந்து, தனி தேசம் வாங்க அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஜனங்கள் சிட்டுக் குருவியைப் போல சுட்டுத் தள்ளப்படுகிறார்கள். இந்த நிலை மாறவும், அமைதியும், சமாதானமும் அங்கே ஏற்படவும் ஜெபியுங்கள். நித்தியத்தைக் குறித்து அவர்கள் சிந்திக்கவும், சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவும் வேண்டிக் கொள்ளுங்கள்.

இங்குள்ள கிறிஸ்தவர்களை கீழ் ஜாதியாக மற்றவர்கள் கருதுகிறார்கள். ஆகவே, உயர் மட்டத்திலுள்ளவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தயங்குகிறார்கள். இங்குள்ள கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையினர் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

தற்போது இங்கு அநேக பெந்தேகொஸ்தே இயக்கங்கள் தோன்றி, இடைவிடாமல்ஜனங்களை கர்த்தருக்கென்று ஆதாயம் செய்துக்கொண்டிருக்கிறது. பெந்தேகொஸ்தே இயக்கங்கள் வளர்ச்சியடையும்படி ஜெபியுங்கள்.

இங்கேயிருக்கிற 45 வகையான உயர்தர இந்துக்கள் சந்திக்கப்படவேயில்லை. அவர்களுக்கு ஒரு ஆலயம் கூட இல்லை. எப்படியாவது சீக்கியர்கள் மத்தியிலே ஒரு எழுப்புதல் உண்டாக ஜெபியுங்கள். சாது சுந்தர் சிங் போன்ற பக்தர்கள் எழும்பும்படி மன்றாடிக் கொள்ளுங்கள்

## ராஜஸ்தானுக்காக ஜெபியுங்கள்:-

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | ஜெய்ப்பூர் |
| ஜனத்தொகை | : | 3,82,00,000 |
| மொழிகள் | : | ராஜஸ்தானி, ஹிந்தி இன்னும் 37 வகையான மொழிகள் பேசப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| ஜனங்கள் | : | ராஜஸ்தானியும், ஹிந்தியும் பேசுகிற மக்கள் 85 சதவீதம் 13 வகை ஆதிவாசிகள் (மியோ, மினா, பில்) 11 சதவீதம் இருக்கிறார்கள். |

| | | | |
|---|---|---|---|
| மதங்கள் : | இந்துக்கள் | சதவீதம் | 89.00 |
| | முஸ்லீம்கள் | ,, | 07.00 |
| | ஜெயின் | ,, | 01.80 |
| | சீக்கியர்கள் | ,, | 01.40 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 00.12 |
| | இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 00.07 |
| | புராட்டஸ்டண்ட் | ,, | 00.05 |

ராதஸ்தான் மாநிலத்தில் 25 மாவட்டங்கள் இருக்கிறது. இதில் ஒன்பது மாவட்டங்களில் மட்டுமே கிறிஸ்தவர்கள் ஓரளவு இருக்கிறார்கள். ஏனைய பதினாறு மாவட்டங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படாமலேயே இருக்கிறது. இந்தியாவிலேயே இங்கு தான் கிறிஸ்தவர்கள் மிகவும் குறைவு. இருக்கிற கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் ஆதிவாசிகளாக இருக்கிறார்கள். கர்த்தர் எப்படியாவது இந்த இடங்களில் இறங்கி கிரியை செய்யும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மியோஸ் என்றுச் சொல்லப்பட்ட ஆதிவாசிகளின் மத்தியிலே இருபது லட்சம் பேர் முஸ்லீம் மார்க்கத்தை தழுவியிருக்கிறார்கள். மட்டுமல்லாமல், உயர்தர ஜாதியாக கருதப்படுகிற ராஜபுத்தினர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படி ஜெபியுங்கள்.

## உத்திர பிரதேசத்திற்காக ஜெபியுங்கள் :-

| | | |
|---|---|---|
| தலைநகர் | : | லக்னோ |
| ஜனத்தொகை | : | 12,42,00,000 |
| பேசும் மொழிகள் | : | ஹிந்தி, உருது, குமானி இன்னும் 84 வகையான மொழிகள். |

ஜனங்கள் : ஆரியர்கள் 95.00 சதவீதம் இன்னும் 5 வகை யான மற்ற ஜாதியினர்.

| | | | |
|---|---|---|---|
| மதம் : | இந்துக்கள் | சதவீதம் | 83.30 |
| | முஸ்லீம்கள் | ,, | 16.00 |
| | சீக்கியர்கள் | ,, | 00.40 |
| | ஜெயின் | ,, | 00.13 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 00.15 |
| இதில் | கத்தோலிக்கர்கள் | ,, | 00.05 |
| | புராட்டஸ்டண்ட் | ,, | 00.10 |

இந்தியாவிலேயே மிக அதிகமான ஜனத்தொகை யுள்ள மாநிலம் உத்திர பிரதேசம்தான். பன்னிரண்டு கோடிக்கு மேற்பட்ட ஜனங்கள் இங்கே இருக்கி றார்கள். ஆனால், கிறிஸ்தவமோ மிகக் குறைவாகவே இருக்கிறது. கிறிஸ்து இவர்களுக்கு மிக அதிகமாய் தேவை. இங்கு மொத்தமே 150 கவிசேவ ஜெபக் குழுக்கள் தான் இயங்குகிறது. பத்து லட்சம் கிறிஸ்தவர்கள் கூட இங்கேயில்லை. ஆங்காங்கே சபைகளை நிறுவுகிற வல்லமை யுள்ள ஊழியக்காரர்கள் இங்கே தேவை.

இங்கு பெயர் கிறிஸ்தவர்களாக நின்று தடுமாறுகிற ஒவ்வொரு சபையும் உயிர்ப்பிக்கப்படும்படி ஜெபியுங்கள். ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது அவன் அந்த ஊரை விட்டே துரத்தப்படுகிறான். ஊர் கட்டுப் பாடு மிகவும் அதிகமாக இருக்கிறபடியினாலே ஜனங்கள் கிறிஸ்தவ மார்க்கத்திற்குள் வர பயப்படுகிறார்கள். அப் படியே வந்தவர்களும் மீண்டும் இந்து மார்க்கத்திற்குள் சென்று விடுகிறார்கள்.

இங்கே போஜ்புரின் என்ற ஜாதியினர் இருக்கிறார்கள். அவர்கள் இரண்டரை கோடி மக்களாவார்கள். இன்னும் அந்த ஜாதியினர் சந்திக்கப்படவில்லை. இரண்டு கோடி முஸ்லீம்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் கர்த்தரை அறிந்து கொள்ளவில்லை. முழு உத்திரப் பிரதேசத்திலும்

இருபத்தொரு சர்வ கலாசாலைகளும், 407" கல்லூரிகளும் இருக்கிறது. ஆனால், நான்கே நான்கு கல்லூரிகளில் மட்டுமே ஊழியம் நடைபெறுகிறது. கர்த்தர் எப்படியாவது உத்திர பிரதேசத்தை அசைக்கும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**மேற்கு வங்காளத்திற்காக ஜெபியுங்கள்:-**

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | கல்கத்தா |
| ஜனத்தொகை | : | 6,00,00,000 |
| பேசப்படும் மொழிகள் | : | பெங்காளி, ஹிந்தி, சந்தாலி, உருது, நேப்பாளி இன்னும் 80 வகை மொழிகள் |

| | | | |
|---|---|---|---|
| ஜனங்கள் : | பெங்காளி | சதவீதம் | 84.00 |
| | ஹிந்தி | ,, | 05.00 |
| | சந்தாலி | ,, | 03 00 |
| | நேப்பாளி | ,, | 01.00 |
| | இன்னும் 30 வகை ஆதிவாசிகள் | ,, | 02.00 |
| மதம் : | இந்துக்கள் | ,, | 77.00 |
| | முஸ்லீம்கள் | ,, | 21.50 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 00.60 |
| | இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 00.47 |
| | புராட்டஸ்டண்ட் | ,, | 00.13 |

மேற்கு வங்காளம் கர்த்தரை அறியும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள். இதில் பெரிய அறிவாளிகள் உண்டு. கம்யூனிஸ தீவிர இயக்கத்தினர்கள் உண்டு. தொடர்ந்து பல ஆண்டுகள் கம்யூனிஸ ஆட்சியில் இருப்பதால் போதுமான எழுப்புதல் ஏற்படவில்லை அங்குள்ள கிறிஸ்தவர்கள் பெயர் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். வளர்ச்சியில்லாமல் இருக்கிறார்கள். ஓரளவு உற்சாகமுள்ள கிறிஸ்தவர்கள் ஐயாயிரத்திற்கும் கீழானவர்கள் தான். அவர்களில்

பெரும்பாலரானோர் ஆதிவாசிகளாக இருக்கிறார்கள். கர்த்தர் எப்படியாவது இந்த சபைகளை உயிர்ப்பிக்கும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இங்குள்ள ஆதிவாசிகளில் பெரும் பகுதியினர் சுவிசேஷத்தை அறியாதவர்கள். இன்னும் இந்தப் பகுதிகளுக்கு சுவிசேஷகர்கள் செல்லவேயில்லை.

மேற்கு வங்காளத்தின் பல மாவட்டங்களில் முஸ்லீம்கள் ஏராளமாய் காணப்படுகிறார்கள். அவர்களை சந்திப்பதற்கு எந்த கிறிஸ்தவ இயக்கங்களும் முயற்சி செய்யவும் இல்லை.

மேற்கு வங்காளத்தில் வானொலியின் மூலமாக சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. தினந்தோறும் ஒரு மணி நேரம் வானொலியின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. இந்த ஊழியத்திற்காய் ஊக்கமாய் ஜெபித்து கொள்ளுங்கள்.

**பீகாருக்காக ஜெபியுங்கள்:-**

| | |
|---|---|
| தலைநகரம் | : பாட்னா |
| ஜனத்தொகை | : 7,83,00,000 |
| முக்கிய மொழிகள் | : ஹிந்தி, உருது, சந்தாலி 30வகையான ஆதிவாசிகள் நூற்றுக்கணக்கான மொழிகள் பேசுகிறார்கள். |

| | | | |
|---|---|---|---|
| ஜனங்கள் : | ஆரியர்கள் 90% | | |
| | ஆதிவாசிகள் 10% | | |
| மதம் : | இந்துக்கள் | சதவீதம் | 82.70 |
| | முஸ்லீம்கள் | ,, | 14.40 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 01.10 |
| | இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 00.55 |
| | புராட்டஸ்டண்ட் | ,, | 00.55 |

A. DEVARAJ PITCHAIMONI, M. Sc.
MUNICIPAL WOMEN CHILDREN
HOSPITAL QUARTERS
TIRUNELVELI
53

பீகாருக்காக ஜெபியுங்கள்! பீகாரிலுள்ள 24 மாவட்டங்கள் இன்னும் கர்த்தரை அறிந்துக் கொள்ளவில்லே. மிகவும் பின் தங்கிய நிலேயில் இருக்கிறது. பீகாரைக் குறித்து அது மிஷனெரிகளின் கல்லறையென்று அநேகர் சொல்லுகிறுர்கள். அநேக மிஷனெரிகள் ஊழியம் செய்ய முடியாமல் மரித்த இடம் இது. ஒரு கோடிக்கு மேல் முஸ்லீம்கள் இருக்கும் இவர்கள் மத்தியிலே ஊழியம் செய்ய ஒரு கிறிஸ்தவ ஊழியர் கூட இல்லே.

பாட்ஞ நகரத்தைக் குறித்து கேள்விப்பட்டிருப்பீர்கள். பீகாரின் தலேநகரம் இது தான். ஒன்பது லட்சம் மக்கள் உண்டு. இந்தப் பெரிய பட்டணத்தில் நூறு கிறிஸ்தவர்கள் கூட இல்லே. அப்படியே இருக்கும் கிறிஸ்தவர்களும் தென்னிந்தியாவிலிருந்து வேலேயின் நிமித்தமாக இங்கு வந்திருப்பவர்கள் தான்.

கிறிஸ்தவர்கள் மிகவும் குறைவான இந்த மாநிலத்தில் ஆதிவாசிகளில் ஒரு சிலர் தான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறுர்கள். இருளடைந்த இந்த மாநிலம் எழுப்புதலடைய ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஆதிவாசிகளின் மத்தியிலே ஊழியம் செய்ய நல்ல வாய்ப்பிருக்கிறது. ஆனுல், ஊழியம் செய்யவோ ஆட்களில்லே. அறுவடைக்கு ஆண்டவர் வேலேயாட்களே அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுங்கள்.

ஜெம்ஸ் என்ற மிஷனெரி இயக்கம், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு போன்ற தமிழக மிஷனெரி இயக்கங்கள் தீவிரமாக மிஷனெரிகளே அங்கே அனுப்பிக் கொண்டிருக்கிறுர்கள். பீகார் எப்படியாவது சந்திக்கப்பட ஊக்கமாய் ஜெபியுங்கள்.

**ஹரியாஞவிற்காக ஜெபியுங்கள்:-**

| | | |
|---|---|---|
| தலேநகரம் | : | சண்டிகார் |
| ஜனத்தொகை | : | 1, 29, 23, 000 |

முக்கிய மொழிகள் : ஹிந்தி, பஞ்சாபி, உருது,

| | | | |
|---|---|---|---|
| மதங்கள் : | இந்துக்கள் | சதவீதம் | 89. 0⁰ |
| | சீக்கியர்கள் | ,, | 06. 00 |
| | முஸ்லீம்கள் | ,, | 04. 00 |
| | ஜெயின் | ,, | 03. 00 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 00. 10 |
| | இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 00. 55 |
| | புராட்டஸ்டண்ட் | ,, | 00. 55 |

ஹரியானுவிற்காக ஊக்கமாய் ஜெபியுங்கள். சுவிசேஷத்திற்கு மிகவும் கடினமான பகுதி இது தான். கிறிஸ்தவர்கள் 1% தான் இருக்கிறார்கள் என்றால் அது எத்தனை வேதனையானது என்பதை யோசித்துப் பாருங்கள். ஆயிரத்தில் ஒருவர் கூட கிறிஸ்தவர்கள் இல்லை. தேவ ஆவியானவர் இந்த மாநிலத்தில் அசைவாடி, கல்லான இருதயங்களை உடைத்து கர்த்தரண்டை திரும்ப வழி வகுக்கும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இங்குள்ள ஜனங்களில் பெரும்பான்மையானோர் விவசாயம் செய்கிறார்கள். கடினமான உழைப்பாளிகள். தாழ்த்தப்பட்டோர் ஏராளம் இங்கு உண்டு. 37 வகையான தாழ்த்தப்பட்ட ஆதிவாசிகளின் வகுப்பினர் இங்கேயிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் சுவிசேஷம் செல்லவில்லை.

ஹரியானுவிற்கும், உத்திரபிரதேசத்திற்கும் நடுவில் டில்லி இருக்கிறது. டில்லியில் எழுபது லட்சம் மக்கள் உண்டு. ஆனால், கிறிஸ்தவர்களோ ஒரு சதவீதம் தான் அங்கேயிருக்கிறார்கள். டில்லியில் உள்ள அரசியல்வாதிகளுக்காக, அரசாங்க அதிகாரிகளுக்காக ஜெபியுங்கள்.

## ஹிமாச்சல பிரதேசத்திற்காக ஜெபியுங்கள்:-

தலைநகரம் : சிம்லா

ஜனத்தொகை : 47,00,000

பேசும் மொழிகள் : ஹிந்தி, பகாரி, பஞ்சாபி இன்னும் 60 வகையான மொழிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| மதங்கள் | : | இந்துக்கள் | சதவீதம் | 96.00 |
| | | முஸ்லீம்கள் | ,, | 01.45 |
| | | சீக்கியர்கள் | ,, | 01.30 |
| | | புத்தர்கள் | ,, | 01.04 |
| | | கிறிஸ்தவர்கள் | ,, | 00.08 |

ஹிமாச்சல பிரதேசத்தைக் கர்த்தர் சந்திக்கும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள். இங்கு கிறிஸ்தவர்கள் மிக மிக குறைவு. இங்கிருக்கும் ஒரு சில கிறிஸ்தவர்களும் வெளி மாவட்டங்களில் இருந்து வந்து குடியேறினவர்கள் தான். பெருவாரியாக இருக்கும் இந்துக்கள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். ஐ.இ.எம். என்ற இயக்கத்தினர் ஹிமாச்சல பிரதேசத்தில் குலு பள்ளத்தாக்கு என்ற இடத்தில் செய்கிற சுவிசேஷ ஊழியங்களுக்காய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சமீப காலங்களில் திபெத்திலிருந்து ஏராளமான அகதிகள் இந்தப் பகுதிக்கு ஓடி வந்து அகதி முகாம்களில் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபியுங்கள்

## ஜம்மு காஷ்மீருக்காக ஜெபியுங்கள்:-

தலைநகரம் : வேனீர் காலங்களில் ஸ்ரீ நகர், குளிர் காலங்களில் ஜம்மு

ஜனத்தொகை : 67,00,000

பேசும்மொழிகள் : காஷ்மீரி, தோக்ரி, கோஜ்ரி, பஞ்சாபி, உருது இன்னும் 70 வகையான மொழிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| மதங்கள் | : | முஸ்லீம்கள் | சதவீதம் | 64.00 |
| | | இந்துக்கள் | ,, | 32.00 |
| | | சீக்கியர்கள் | ,, | 02.20 |

| | | |
|---|---|---|
| புத்தர்கள் | ,, | 01.20 |
| கிறிஸ்தவர்கள் | ,, | 00.14 |

ஜம்மு காஷ்மீர் முஸ்லீம்களால் அரசாட்சி செய்யப்படுகிறது. இந்தியாவிலுள்ள மாநிலங்களிலே முஸ்லீம்கள் அதிகமாய் உள்ள மாநிலம் ஜம்மு காஷ்மீர் தான். மூஸ்லீம் மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட முப்பது குடும்பங்கள் இங்கு உண்டு அவர்கள் விசுவாசத்தில் நிலைத்து நிற்கவும், கர்த்தருக்காக வல்லமையுள்ள சாட்சியாக விளங்கவும் அவர்களுக்காக ஊக்கமாய் ஜெபியுங்கள்.

இந்துக்களில் மிக உயர்ந்த இந்துக்கள் என்று அழைக்கப்படுகிற பிராமண பண்டிதர்கள் இங்கே வாழ்கிறார்கள். அவர்கள் இந்த மாநில ஜனத்தொகையில் ஐந்து சதவீதம் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள். இங்கு, ஏராளமான முஸ்லீம்கள், ஆதிவாசிகள் உண்டு. திபெத்தை சேர்ந்த புத்த மார்க்கத்தினர் உண்டு. இவர்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க ஒருவரும் இல்லை.

பாகிஸ்தான் தான் ஜம்மு காஷ்மீரின் மேல் எப்பொழுதும் ஒரு கண் வைத்துக் கொண்டேயிருக்கிறது. அது விழுங்க முயற்சிக்கிறது. ஆகவே, ஜம்மு காஷ்மீரின் சமாதானத்திற்காகவும், நிலையான அரசாங்கம் அமையவும், அங்கே வாழ்கிறவர்கள் சுவிசேஷத்திற்கு இருதயத்தை திறக்கவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

## மத்திய பிரதேசத்திற்காக ஜெபியுங்கள் :-

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | போபால் |
| ஜனத்தொகை | : | 5,83,00,000 |
| பேசப்படும் மொழிகள் | : | ஹிந்தி, மராத்தி, கோண்டி, பிலி இன்னும் 218 வகையான மொழிகள் |

| | | | |
|---|---|---|---|
| ஜனங்கள் : | ஆரியர்கள் | சதவீதம் | 56.00 |
| | சாற்றிஸ்ஹார்கி | ,, | 20.00 |
| | கோண்டர்கள் | ,, | 10.00 |
| | ஆதிவாசிகள் | ,, | 10.00 |
| மதங்கள் : | இந்துக்கள் | ,, | 93.00 |
| | முஸ்லீம்கள் | ,, | 04.80 |
| | ஜெயின் | ,, | 04.80 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 00.67 |

இந்து மார்க்கத்தில் வெறியுள்ள அரசாங்கம் மத்திய பிரதேசத்தில் இருக்கிறது. கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மதம் மாற்றக்கூடாத கடுமையான சட்டங்களும், கடுமையான நடவடிக்கைகளும் அமுலாக்கப்பட்டிருக்கிறது. வெளி தேசத்திலிருந்து எந்த மிஷனெரிகளும் இங்கே இறங்க அரசாங்கம் அனுமதிப்பதில்லை.

இங்குள்ள சிறிய சபை மிக மெதுவாக வளர்ந்து வருகிறது. ஆவிக்குரிய முன்னேற்றம் நத்தை வேகத்தில் இருக்கிறது. அது தீவிரப்பட ஜெபியுங்கள். இங்கு ஏறக் குறைய அறுபது வகையான ஆதிவாசிகள் உண்டு. பெரும் பாலானோர் இதுவரை சுவிசேஷத்தில் சந்திக்கப்படவில்லை. கர்த்தர் இங்கே ஊழியக்காரர்களை அனுப்ப ஊக்கமாய் ஜெபியுங்கள்.

## அருணாச்சல பிரதேசத்திற்காக ஜெபியுங்கள் :-

| | |
|---|---|
| தலைநகரம் | : இடா நகர் |
| ஜனத்தொகை | 7,22,000 |
| பேசும் மொழிகள் | : நிஸ்ஸி, ஆதி, வான்கோ, மொம்பா, நாட்டி, பெங்காளி |
| ஜனங்கள் | : 24 வகையான ஆதிவாசிகள். அவர்களுக்குள்ளே பல வகையான இனங்கள் காணப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| மதங்கள் | : | சொந்த ஆவியின் வழிபாடு கடைபவர்கள் சதவீதம் | 00.50 |
| | | இந்துக்கள் ,, | 00.30 |
| | | புத்தர்கள் ,, | 00.14 |
| | | கிறிஸ்தவர்கள் ,, | 00.06 |

அருணாச்சலப் பிரதேசத்திற்காக ஜெபியுங்கள். எவ்வளவோ எதிர்ப்புகளுக்கும், போராட்டங்களுக்கும் மத்தியிலும் கூட மிக வேகமாக அங்குள்ள சபைகள் வளர்ந்துக் கொண்டு வருகிறது. உபத்திரவங்களும், சித்திரவதைகளும் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் அதிகமாய் இருக்கிறது. கிறிஸ்தவர்கள் ஆராதிப்பதற்கு கூட இடம் இல்லை. அநேக மொழிகளில் இன்னும் வேதாகமமும் மொழி பெயர்க்கப்படவில்லை. இங்குள்ள ஜனங்களின் படிப்பறிவு மிகவும் குறைவு.

இங்கு இந்து மார்க்கம் வளருவதற்கான எல்லா வழி முறைகளும் அரசாங்கம் செய்துக் கொடுத்திருக்கிறது. ஆனல், கிறிஸ்தவர்களுக்கு சுதந்திரம் இல்லை. அநேக ஆலயங்கள் அழிக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகளுக்கு விரோதமான பல கொடுமைகள் நடக்கின்றன. இந்திய தேசம் வாக்களித்திருக்கிற மத சுதந்திரம் முழுமையாக இந்த மாநிலத்தில் அமுல் படுத்தப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இங்குள்ள ஆதிவாசிகளில் பெரும்பகுதியினர் இன்னும் சந்திக்கப்படவில்லை. விடுதலையோடு கர்த்தரை ஆராதிக்கவும், சுவிசேஷத்திற்கான சுதந்திரம் கிடைக்கவும் ஊக்கமாக ஜெபியுங்கள்.

## அஸாமுக்காக ஜெபியுங்கள்:-

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | டிஸ்பூர் |
| ஜனத்தொகை | : | 2,23,00,000 |
| பேசும் மொழிகள் | : | அஸாம், பெங்காளி, நேபாளி, காச்சாரி. |

| | | | |
|---|---|---|---|
| ஜனங்கள் : | அஸாமியர் | சதவீதம் | 60.00 |
| | பெங்காளியர் | ,, | 20.00 |
| | 23 வகை ஆதி வாசிகள் | ,, | 12.00 |

| | | | |
|---|---|---|---|
| மதங்கள் : | இந்துக்கள் | சதவீதம் | 71.00 |
| | முஸ்லீம்கள் | ,, | 24.00 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 04.50 |
| | இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 00.84 |
| | புராட்டஸ்டண்ட் | ,, | 03.75 |

இங்கே அதிகமான சபை வளர்ச்சி காணப்படுகிறது. சமீப காலத்தில் எழுப்புதல் ஏற்பட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். வெளி தேசத்திலிருந்து வந்த மிஷனெரிகள் ஆரம்பித்து வைத்த சுவிசேஷ வேலையை இன்று நாகலாந்திலும், மிஸோரத்திலுமுள்ள மிஷனெரிகள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். சுவிசேஷ வேலைக்கு கர்த்தர் வேலையாட்களை அனுப்பும்படியாகவும் சபைகள் நிறுவப்படும்படியாகவும் இன்னும் மொழி பெயர்க்கப்பட வேண்டிய மொழிகளில் வேதாகமம் மொழி பெயர்க்கப் படும் படியாகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்

இந்தப் பகுதியில் வாழும் அஸாமியர்கள் பெரும் பாலும் இந்துக்கள்தான். அடிக்கடி இவர்களுக்கும், கிழக்கு வங்காளத்திலிருந்து அகதிகளாக வருகிற முஸ்லீம் களுக்கும் பயங்கரமான கலவரங்கள் நடக்கிறது. கர்த்தர் தாமே சுவிசேஷத்தினால் இவர்களைச் சந்திக்கும்படி ஜெபித் துக் கொள்ளுங்கள். ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை கிறிஸ்தவர்கள் முன் நின்று செய்யும்படி கிறிஸ்தவர்களுக் காக ஜெபியுங்கள்.

இங்குள்ள ஆதிவாசிகளில் பெரும் பகுதியினர் சந்திக் கப்படவில்லை. பொரோ என்ற ஆதிவாசிகள் பத்து லட்சம் பேர் இருக்கிறார்கள். கச்சாரி என்ற ஆதிவாசிகள் மூன்று லட்சம் பேர் இருக்கிறார்கள். மிரி என்ற ஆதிவாசிகள் 3.6 லட்சம் பேர் இருக்கிறார்கள். மிக்கிரி என்ற ஆதிவாசிகள்

2.2 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் மத்தியிலே சபைகள் நிறுவப்பட ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**மணிப்பூருக்காக ஜெபியுங்கள்:-**

தலைநகரம் : இம்பால்

ஜனத்தொகை : 16,00,000

பேசும் மொழிகள் : மணிப்பூரி, நாகா, குகிச்சின்

| | | | |
|---|---|---|---|
| ஜனங்கள்: | மணிப்பூரியர்கள் | சதவீதம் | 64.00 |
| | 28 வகை ஆதிவாசிகள் | " | 36.00 |
| மதங்கள் : | இந்துக்கள் | " | 60.00 |
| | முஸ்லீம்கள் | " | 07.00 |
| | செத்த ஆவியை வழிபடுபவர்கள் | " | 02.00 |
| | கிறிஸ்தவர்கள் | " | 31.00 |
| | இதில் கத்தோலிக்கர்கள் | " | 02.50 |
| | புராட்டஸ்டண்ட் | " | 28.50 |

இங்குள்ள ஆதிவாசிகள் எல்லோரும் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். கடந்த எண்பது ஆண்டுகளாக இங்கு எழுப்புதல் அக்கினி பற்றிக்கொண்டேயிருக்கிறது. தொடர்ந்து சபைகளின் ஐக்கியத்திற்காகவும், எழுப்புதல் அந்த மாநிலம் முழுவதிலும் பரவும்படியாகவும் வேண்டிக் கொள்ளுங்கள். இங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு கர்த்தர் ஆத்தும பாரத்தைத் தரும்படியாகவும், மிஷனெரி ஊழியம் இன்னும் துரிதமாக நடைபெறவும் வேண்டிக்கொள்ளுங்கள்.

இந்த மாநிலத்தைச் சேர்ந்த மணிப்பூரியர்கள் இன்னும் சந்திக்கப்படவில்லை. பத்து லட்சம் மக்கள் மத்தியிலே இரண்டாயிரம் கிறிஸ்தவர்கள்கூட இல்லை. கர்த்தர் எப்படியாவது அவர்களைச் சந்திக்கும்படி ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## மேகாலயாவிற்காக ஜெபியுங்கள்:-

தலைநகரம் : சில்லாங்
ஜனத்தொகை : 13,60,000
பேசும் மொழிகள் : காசி, காரோ, பெங்காளி, அஸாமி

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனங்கள் | : | காசி | சதவீதம் | 52.00 |
| | | காரோ | ,, | 25.00 |
| | | பெங்காளி | ,, | 09.00 |
| | | அஸாமி | ,, | 03 00 |
| | | 16 வகை ஆதிவாசிகள் | ,, | 08.00 |
| மதங்கள் | : | செத்த ஆவிகளை வழிபடுபவர்கள் | ,, | 31 90 |
| | | இந்துக்கள் | ,, | 18.50 |
| | | முஸ்லீம்கள் | ,, | 02 50 |
| | | கிறிஸ்தவர்கள் | ,, | 47.00 |
| | | இதில் புராட்டஸ்டண்ட் | ,, | 36.00 |
| | | கத்தோலிக்கர்கள் | ,, | 11.10 |

இங்குள்ள சபைகளில் பெரும்பாலான சபைகள் பெயர் கிறிஸ்தவ சபைகளாகவும், பாப்டிஸ்ட் சபைகளாகவும் விளங்குகின்றன. கர்த்தர் இங்கே ஒரு பெரிய எழுப்புதலை அனுப்ப ஊக்கமாய் ஜெபியுங்கள்.

இங்குள்ள சபைகள் எல்லாம் மற்ற புறமதஸ்தவர்களைச் சந்திக்க செய்யும் முயற்சிகள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும்படி மன்றாடுங்கள்.

இங்குள்ள ஆதிவாசிகளில் பலரும் இந்து மார்க்கத்தை நோக்கி இழுக்கப்படுகிறார்கள். செத்த ஆவி வழிபாடு உடையவர்கள் மனம் திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## மிஸோரமுக்காக ஜெபியுங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| தலைநகரம் | : | ஐசால் | |
| ஜனத்தொகை | : | 5,00,000 | |
| பேசும் மொழி | : | மிஸோ | |
| ஜனங்கள் | : | மிஸோரியர்கள் சதவீதம் | 86.2 |
| | | பர்மாவை சேர்ந்தவர்கள் ,, | 6.8 |
| | | பெங்காளி ,, | 0.6 |
| மதங்கள் | : | புத்தர்கள் ,, | 6.8 |
| | | இந்துக்கள் ,, | 6.4 |
| | | முஸ்லீம்கள் ,, | 0 6 |
| | | கிறிஸ்தவர்கள் ,, | 86.2 |
| | | இதில் புராட்டஸ்டண்ட் ,, | 84.5 |
| | | கத்தோலிக்கர்கள் ,, | 1.7 |

இந்தியாவிலேயே மிகப் பெரிய எழுப்புதல் இந்த இடத்தில் தான் நடந்துக் கொண்டிருக்கிறது. மிஸோ மொழி பேசும் மக்கள் ஏறக்குறைய எல்லோருமே கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். எழுப்புதல் அக்கினி தொடர்ந்து பற்றியெரியும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இங்கேயிருந்து ஏறக்குறைய 300 மிஸோ மிஷனெரிகள் இந்தியாவின் மற்ற எல்லா பாகங்களிலும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வல்லமையாக ஊழியம் செய்ய ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## நாகலாந்திற்காக ஜெபியுங்கள்:-

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | கொஹிமா |
| ஜனத்தொகை | : | 91,000 |
| பேசும் மொழிகள் | : | ஆவே, கொனியாக், சேமா, லொதா, ஹிந்தி, பெங்காளி. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனங்கள் | : | நாகவாசிகள் | சதவீதம் | 85.00 |
| | | பெங்காளி, ஹிந்தி | ,, | 11.00 |
| மதங்கள் | : | இந்துக்கள் | ,, | 14.00 |
| | | முஸ்லிம்கள் | ,, | 01.70 |
| | | கிறிஸ்தவர்கள் | ,, | 80.00 |
| | | இதில் கத்தோலிக்கர்கள் | ,, | 09.00 |
| | | புராட்டஸ்டண்ட் | ,, | 71.00 |

1976-ம் ஆண்டு முதல் 1978-ம் ஆண்டு வரை தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வல்லமையான எழுப்புதல் இந்த இடத்தில் இருந்தது. இதன் மூலமாக நாகா ஜனங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். சபையிலும், ஜனங்களின் வாழ்க்கையிலும் மாபெரும் வல்லமையான மாற்றங்கள் நிகழ்ந்தன. தொடர்ந்து இந்த எழுப்புதல் பற்றியெரியும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இன்று எழுப்புதல் அடைந்திருக்கும் நாகா இனத்தவர்கள் தங்கள் மாநிலத்தில் இருந்து பல மிஷனெரிகளை இந்தியாவில் பல இடங்களுக்கு அனுப்பும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

1980-ம் ஆண்டு நடந்த உலக சுவிசேஷ மாநாட்டில் இந்த நாகா ஆதிவாசிகள் பத்தாயிரம் மிஷனெரிகளை வெளி இடங்களுக்கு அனுப்புவதாக பொருத்தனை செய்தார்கள். அதிலே வருகிற தடைகள் நீங்கவும், அங்கே இருக்கிற எழுப்புதல் இயக்கங்கள் பெலனடையவும் ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**சிக்கிமிற்காக ஜெபியுங்கள்:-**

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | காங்டோ |
| ஜனத்தொகை | : | 3,53,00,000 |
| பேசும் மொழிகள் | : | நேபாளி, லெப்கா, பூடியா, லிம்பு |

| | | | |
|---|---|---|---|
| ஜனங்கள் | : | நேபாளியர் | சதவீதம் 75.00 |
| | | லெப்சா | „ 14.00 |
| | | போதியர் | „ 11.00 |
| மதங்கள் | : | இந்துக்கள் | சதவீதம் 67.00 |
| | | புத்தர்கள் | „ 28.70 |
| | | முஸ்லீம்கள் | „ 01.00 |
| | | கிறிஸ்தவர்கள் | „ 02.30 |

இந்த சபை வளர்ச்சிக்காக ஜெபியுங்கள். இங்குள்ள கிறிஸ்தவர்களில் பெரும் பகுதியினர்கள் வட இந்தியாவின் திருச்சபையில் அங்கம் வகிக்கிறார்கள். பெரும்பாலான சபைகள் வீடுகளிலே கூடி ஆராதிக்கிறார்கள். இந்த மாநிலம் முழுவதிலும் ஒரு பெரிய கட்டிடம் மட்டுமே உண்டு. அது தான் அவர்கள் ஆராதிக்கின்ற ஆலயம்.

கிறிஸ்தவர்கள் இங்கு அடிக்கடி துன்பப்படுத்தப்படுகிறார்கள். பல நேரங்களில் இரத்த சாட்சிகளாக மரிக்கிறார்கள். மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதில் அவர்கள் திடன்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சில தென்னிந்திய மிஷனெரிகள் அங்கு சென்று உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பின் பலன் அதிகரிக்க ஊக்கமாய் ஜெபியுங்கள்.

## திரிபுராவிற்காக ஜெபியுங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| தலைநகரம் | : | அகார்தலா | |
| ஜனத்தொகை | : | 24, 00, 000 | |
| முக்கிய மொழிகள் | : | பெங்காளி, கொக்பாரக், திரிபுரி, மணிபுரி. | |
| ஜனங்கள் | : | பெங்காளி | சதவீதம் 70. 00 |
| | | திரிபுரி | „ 11. 00 |

| | | | |
|---|---|---|---|
| | 30 வகை ஆதிவாசிகள் | ,, | 00. 14 |
| மதங்கள் : | இந்துக்கள் | ,, | 89. 00 |
| | முஸ்லீம்கள் | ,, | 07 00 |
| | புத்தர்கள் | ,, | 02. 70 |
| | கிறிஸ்தவர்கள் | ,, | 01. 30 |

வங்காளிகள் திரிபுரத்திற்குள் நுழைந்து கடந்த 30 ஆண்டுகளாக அதை ஆக்கிரமித்து அரசாங்கத்தை கைப் பற்றியிருக்கிறார்கள். 1970-ம் ஆண்டு முதல் இவர்கள் அங்குள்ள ஆதிவாசிகளை அடிமைப்படுத்தி ஒடுக்கி வருகிறார்கள். இந்த ஆதிவாசிகளில் ஆறு ஜாதியினம் முழுவதுமாக கிறஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள். ஏழாவது வகை ஆதிவாசி ஜாதிகளிடத்தில் கிறிஸ்தவ மார்க்கம் வேகமாக பரவுகிறது.

இங்குள்ள கிறிஸ்தவர்கள் இந்துக்களாலும், கம்னிஸ்டுகளாலும் மிகவும் ஒடுக்கப்படுகிறார்கள். மிகுந்த நெருக்கத்தின் மத்தியிலும் அங்குள்ள சபை மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது.

வங்காளர்கள் மிகவும் பெருமையுள்ளவர்களாகவும், மேட்டிமையுள்ளவர்களாகவும் இருந்துக் கொண்டு சுவிசேஷத்தை புறக்கணிக்கிறார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## அந்தமான் தீவுகளுக்காக ஜெபியுங்கள்:-

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | போட்பிளேயர் |
| ஜனத்தொகை | : | 1, 88, 741 |
| பேசப் மொழிகள் | : | பெங்காளி, ஹிந்தி, நிக்கோபாரிஸ், தமிழ், மலையாளம் |

| | | | |
|---|---|---|---|
| மதங்கள் | : இந்துக்கள் | சதவீதம் | 61 |
| | முஸ்லீம்கள் | ,, | 10 |

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவர்கள் | .. | 26 |
| இதில் கத்தோலிக்கர்கள் | .. | 8 |
| புராட்டஸ்டண்ட் | .. | 18 |

அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஏராளமாய் வங்காள விரிகுடா கடலில் பரந்து, விரிந்துக் கிடக்கிறது. இதில் நிக்கோபார் மொழி பேசும் மக்கள் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாகவே இருக்கிறார்கள் மற்றபடி அந்தமானில் உள்ள ஜனங்கள் கிறிஸ்துவை இன்னும் அறியவில்லை. அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபியுங்கள்.

இங்கே ஜாரவா என்று சொல்லப்பபடுகிற ஆதிவாசிகள் கொலை வெறியுள்ளவர்கள். அரசாங்கமோ அல்லது சுவிசேஷகர்களோ அவர்களைச் சந்திக்க இடங்கொடுப்பதில்லை

அந்தும் ஆதிவாசிகளை சந்திப்பதற்கு அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. தியாகமாக ஆதிவாசிகள் மத்தியிலே ஊழியம் செய்ய கர்த்தர் ஊழியக்காரரர்களை எழுப்பும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## லட்சத் தீவுகளுக்காக ஜெபியுங்கள்:-

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | காவரட்டி |
| ஜனத்தொகை | : | 45, 000 |
| பேசும் மொழிகள் | : | மலையாளம் |
| மதம் | : | இஸ்லாம் |

இந்த லட்சத் தீவுகள் அரபிக்கடலின் அருகில் இருக்கிறது. கொச்சினில் இருந்து செல்லதற்கு அருகில் உள்ளது.

இந்த தீவுகளில் கிறிஸ்தவர்கள் ஒருவர் கூட இல்லை. இருக்கிற முஸ்லீம்களும் மிகவும் வைராக்கியம் உள்ள முஸ்லீம்களாக இருக்கிறபடியினாலே சுவிசேஷத்தினால் இவர்களை சந்திப்பதற்கு இதுவரை எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

லட்சத் தீவுகள் என்று சொல்லும்போது அங்கே பத்து பெரிய முக்கியமான தீவுகள் இருக்கிறது. மலையாள மொழி பேசும் இவர்களை கர்த்தர் விரைவாக சந்திக்க ஊக்கமான ஜெபங்கள் தேவை. லட்சத் தீவுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படும் என்றால், அங்கேயிருந்து சுலபமாக மாலத்தீவுகளுக்கு சுவிசேஷம் கொண்டு செல்ல வசதியாக இருக்கும்

## புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 112. | சபைகள் வளரட்டும்! (பால் யாங்கி சோ) | 15 00 |
| 113. | ஜெயங்கொள்கிறவன் எவனோ? | 5 00 |
| 114. | ஆவிகளைப் பகுத்துணர்வது எப்படி? | 5 00 |
| 115. | சில சம்பவங்களும், வேத வசனங்களும்! | 5 00 |
| 116. | துணுக்...துணுக்...துணுக்குகள்! | 5 00 |
| 117. | பக்தியுள்ளவனே, கலங்காதே! | 5 00 |
| 118. | அறியப்படாதவர்கள்! | 5 00 |
| 119. | பரலோகமே, என் சொந்தமே! | 5 00 |
| 120. | நீ பயப்படாதே! | 5 00 |
| 121. | இழந்து போனதை பெற்றுக்கொள்! | 5 00 |
| 122. | திருமணமும், நறுமணமும்! | 5 00 |
| 123 | சாபங்களை முறிப்பது எப்படி? | 5 00 |
| 124. | பரிசுத்தமாய் ஜீவிப்பது எப்படி? | 5 00 |
| 125. | ஏன் கலங்குகிறாய்? | 5 00 |
| 126. | பாடுகளா? எனக்கா? (பால் யாங்கி சோ) | 10 00 |
| 127. | புது சிருஷ்டி! | 5 00 |
| 128. | மன ரம்மியம்! | 5 00 |
| 129. | வேதனைகள் நீங்கட்டும்! | 5 00 |
| 130. | பரிசுத்த உபவாச நாட்கள்! | 10 00 |
| 131. | அதிசயங்களின் தேவன்! | 5 00 |
| 132. | கைவிடப்பட்டால்! (டான் ஸ்டேன்டன்) | 10 00 |
| 133. | சிங்கார மாளிகை! (B.பால்) | 5 00 |
| 134. | துதிப்போம் வாரீர்! | 5 00 |
| 135. | வெளிப்படுத்தலில் ஏழு சபைகள்! | 10 00 |

## மனம் விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலமாய் உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை நன்றியோடு துதிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

ஜெப வீரர் சேனைக்கென்று இந்தப் புத்தகத்தை எழுதும்படி கர்த்தர் கிருபை செய்தார் ஆம்! நாம் ஜெப ஆவியாலும், விண்ணப்பத்தின் ஆவியாலும், கிருபையின் ஆவியாலும் நிரப்பப்பட வேண்டியது அவசியம். இந்தியாவிற்காக ஊக்கமாய் ஜெபிக்க வேண்டியது அவசியம். அந்தகாரத்தின் வல்லமையை மேற்கொண்டு, கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தை நிலைப்படுத்த வேண்டியது அவசியம்.

இந்தப் புத்தகத்தை எழுத உதவி செய்த ஒரு சகோதரியின் குடும்பத்திற்காக ஊக்கமாய் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் அவர்கள் கணவனையும் அவர்களையும் நான் இதுவரை நேரில் சந்திக்காமல் இருந்தாலும் கூட அவர்கள் அடியேனுடைய ஊழியத்தின் ஆரம்ப நாளிலிருந்து புத்தகத்திற்கு உதவி செய்துக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்ப வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

Mrs. Stella Rani Stephen, Madras-28

இந்தப் புத்தகத்திலல் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் அவர்களையும் அவர்கள் அருமைக் குடும்பத்தினரையும் சேருவதாக.

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம்
குறைந்தது 50 பேருக்காவது வாசிக்கக்
கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை
புதுபுத்தகங்களை மலரச் செய்யும்!

# ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்தும பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 100 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1965 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :
J. சாம்ஜெபத்துரை, M.A.,
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.